# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 15 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 30 வெள்ளிக்கிழமை (14-01-2000) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 43




அப்ப குடாநாடு முழுவதுமே இனிதோண்ட வேணும் போல...!

## தனங்களப்பு, அரியாலை தொடரும் தாக்குதல்கள்

கொழும்பு, ஜன. 14

கொழும்புத்துறை, அரியாலை, தனங்களப்பு ஆகிய பகுதிகளில் உள்ள படையினரின் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல்களைப் படையினர்முறியடித்து விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தனங்களப்புகாவலரண் பகுதியில்ரோந்து சென்ற படையினர் தென் கிழக்குப் பகுதியில் ஒன்று கூடிய விடுதலைப் புலிகள் மீது தாக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அராலிச் சம்பவம் தொடர்பாக

## விசாரணைக்கு உள்ளான சிப்பாய் நேற்று தற்கொலை!

யாழ்ப்பாணம், ஜன. 14

அராலி தெற்கில் பாடசாலை மாணவன் ஒருவரைப் பலவந்தமாகத் தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சிப்பாய் ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சமயம் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை உடுவிலில் உள்ள இராணுவ பிரிக்கேட் தலைமையகத்தில் இடம்பெற்றது.

அராலி தெற்கைச் சேர்ந்த பிரஸ்தாப மாணவன் பாடசாலை விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் சிப்பாய் அவரை வழிமறித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 100க்கும் மேற்பட்ட கடற் படையினருக்கு இஸ்ரேலில் பயிற்சி!

கொழும்பு, ஜனவரி 14

இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட கடற்படை அதிகாரிகளை மேலதிக பயிற்சிக்காக இஸ்ரேலுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது விடயமாகப் பேச்சுக்கள் நடத்த உயர்மட்டக்குழு ஒன்று இஸ்ரேல் சென்றுள்ளது.

இஸ்ரேலில் இருந்து 185 கோடி ரூபா பெறுமதியான இரு நவீன அதிவேகப் படகுகளை வாங்குவதற்கு இலங்கை கடற்படை அந்த நாட்டுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது

அந்தப் படகுகளில் பணியாற்றவிருக்கும் கடற்படை அதிகாரிகளுக்கு விசேட பயிற்சியை இஸ்ரேல் வழங்க வேண்டும் எனக் கடற்படையினர் விரும்புவதாகவும்—

அது தொடர்பான பேச்சுக்களை நடத்த கடற்படை நடவடிக்கைத்துறை இயக்குநர் கொமடோர் ரி. சமரசிங்க தலைமையில் ஐவர் அடங்கிய குழு ஒன்று இஸ்ரேல் சென்றுள்ளது என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

(இ-3-4)

### குப்பிளானில் மீட்கப்பட்ட

## எலும்புக்கூடுகளில் ஒன்று அடையாளம் காணப்பட்டது!

புன்னாலைக்கட்டுவன், ஜன. 14

குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்துக்கு அருகில் கடந்த இரு தினங்களில் மீட்கப்பட்ட இரு எலும்புக் கூடுகளில் ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டது.

குப்பிளானைச் சேர்ந்த தம்பிநாதர் அம்பிகைபாகன் (வயது 45) என்பவரின் எலும்புக்கூடே அது என அவரது மைத்துனரான பரமநாதன் சச்சிதானந்தன் (வயது 40) என்பவர் அடையாளம் காட்டினார்.

( 12 ஆம் பக்கம் பார்க்க )

## வன்னி மக்கள் நிலைமை குறித்து ஐ. நா. செயலருக்கு மகஜர்

வவுனியா, ஜன. 14

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கான உணவு விநியோகம் சீர்குலைந்திருப்பதால் அங்கு பட்டினி நிலைமை உருவாகியுள்ளது என்று வன்னிப் பிராந்திய பிரஜைகள் குழு ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் தெரிவித்துள்ளது.

வன்னிப் பிராந்திய பிரஜைகள் குழு இது தொடர்பாக மகஜர் ஒன்றை ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி உள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது. வன்னிக்குச் சீரான

[12 ஆம் பக்கம் பார்க்க]

## கல்லடியில் கிளைமோர் தாக்கு! 5 பொலீஸார் நேற்றுக் காயம்

மட்டக்களப்பு, ஜன. 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி பிரதான வீதியில் நேற்றுக் காலை 8-15 மணியளவில் பொலீஸ் வாகனம் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 4 பெண் பொலீஸார் உட்பட ஐந்து பொலீஸார் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 15 வயதுச் சிறுவன் ஒருவர் கொல்லப்பட்டார்.

மட்டக்களபபுப் பொலீஸ் நிலையத்தில் இருந்து காத்தான் குடி பொலீஸ் நிலையத்துக்கு வாகனத்தில் சென்ற பொலீஸார் மீதே கிளைமோர்தாக்குதல் நடத்தப்பட்டது

சாந்தி தியேட்டருக்கு அருகில் வீடு ஒன்றில் மதில்கரையில் கிளைமோர் வைக்கப்பட்டிருந்தது. காயமடைந்த பொலீஸார் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இந்தக் குண்டு வெடிப்பில் சிக்கி ஆசிரிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரான்ஸி நிலபேர வழக்கிலிருந்து ஜெயலலிதா விடுவிக்கப்பட்டார்

சென்னை, ஜன. 14

தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் சொத்துக்களை ஜெயலலிதா மற்றும் சசிகலாவின் பேரில் அடிமாற்று விலைக்கு விற்கச் சொன்னது தொடர்பான 'ரான்ஸி' நிலபேர வழக்கில் இருந்து தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் நிலங்கள், கட்டடங்கள் என்பவற்றை 'ஜெயாபப்ளிகேஷன்' மற்றும் 'சசி என்டப்பிரைசஸ்' என்ற நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் விற்க ஜெயலலிதா தனது அரச செல்வாக்கைப் பயன்படுத்தினார். இதனால் அரச நிறுவனத்திற்கு 3.5 கோடி ரூபா (இந்திய ரூபா) நஷ்டம் என தி.மு.க. சிறப்பு

[12 ஆம் பக்கம் பார்க்க]

## சாரதாம்பாள் கொல்லப்பட்டதற்கு ஜனாதிபதியே பதில் தரவேண்டும்

### இறுதிக் கிரியைகளின் போது வாசுதேவா உரை

கொழும்பு, ஜன. 14

''புங்குடுதீவில் கடந்த 29 ஆம் திகதி சாரதாம்பாள் என்ற பெண் கொலை செய்யப்பட்டமைக்கு முப்படைத் தளபதியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவே பதில் சொல்லவேண்டும்''.

மேற்கண்டவாறு இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவா நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கனத்தைமயானத்தில் நேற்றுக் காலை நடந்த சாரதாம்பாளின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட வாசுதேவ அங்கு பேசுகையிலேயே இப்படிக் கூறினார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

சாரதாம்பாளின் கொலையை நாகரிக உலகம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்தக் கொடூரக் கொலையைச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன் எனப் புரியவில்லை.

இந்தக் கொலையை யார் செய்தார்கள் என்றால் பாதுகாப்புப் படையினர் பக்கமே கைவிரல் செல்கின்றது. சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இந்தக் கொலைக்கு ஜனாதிபதியே பதில் கூறவேண்டும் — என்றார்.

இந்த இறுதிக்கிரியைகளில் ஈ. பி. டி. பி. அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு பிரிட்டிஷ் ஆயுதம் இனி கடனுக்கு விற்பனை இல்லை

லண்டன், ஜன. 14

இலங்கை அரசு பிரிட்டனிடமிருந்து 'ஏற்றுமதிக் கடன்' மூலம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

பிரிட்டனில் இருந்து இலங்கை வருடா வருடம் பெருந்தொகையான யுத்த தளபாடங்களை இந்த ஏற்றுமதிக் கடன் அடிப்படையிலேயே கொள்வனவு செய்து வருகிறது.

இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக செய்யப்படும் உற்பத்தி முதலீடுகளுக்கே பிரிட்டன் இனி இந்த ஏற்றுமதி கடன் வசதிகளை வழங்கும் என பிரிட்டிஷ் நிதி அமைச்சர் கோர்டன் பிரவுண் தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதிக் கடன் அடிப்படையில் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு பிரிட்டனினால் ஏற்கனவே தடை விதிக்கப்பட்ட 42 நாடுகளுடன் புதிதாக சேர்க்கப்பட்ட 22 நாடுகளுள் இலங்கை, பங்களாதேஷ் ஆகியவையும் அடங்கும்.

(இ-4)

# கண்ணீர் அஞ்சலி

பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்
சிவ தொண்டராகிய பெருமாள் கோயிலடியில் வசித்த

## சின்னத்துரை சற்குணராஜாவின்

திடீர் மரணத்தையிட்டு சகல அடியார்களும், தர்மகர்த்தா சபை அங்கத்தவர்களும், அன்னாரின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும் தர்மகர்த்தா சபையினது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்கின்றோம்,

தர்மகர்த்தா சபை,
பன்றிக்கோட்டுப்பிள்ளையார் கோயில்.

655, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (72699)

# மரண அறிவித்தல்கள்

## தாமு குழந்தைவேலு

ஏழாலையைச் சேர்ந்த தாமு குழந்தைவேலு அவர்கள் நேற்று (13-01-2000) காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் க. புஸ்பலீலா, கு. தங்கவடிவேல்(டோகா), சு. ராணி, கு. லோகேந்திரம், கா. றஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சி. கதிரவேலு (ராசு), த. சறோஜினிதேவி (ராணி), பொ. காசிலிங்கம், ந. சுந்தரலிங்கம், லோ. சகிலாதேவி ஆகியோரின் மாமனாரும் வினோயினி, சிவாகரன், றோஜினி, துகிர்தன், ஜெகன், விஜிதா, றஜிதா, ரஜிதா, தீபா, காண்டீபன், சர்மிளா, லமிறா, பவிஷா, திபேஜன், தர்சிகன், கபிலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஏழாலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (14-01-2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறறார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. லோகேந்திரம்
(மகன்)

ஏழாலை மத்தி,
ஏழாலை. (72698)

## இலகுப்பிள்ளை இராசா

(ஓய்வு பெற்ற ஓபல்கல குறாப் தோட்டப் பாடசாலை ஆசிரியர், அகில இலங்கை தோட்டப் பாடசாலை ஆசிரியர் சங்கக் காரியதரிசி)

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்பொழுது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இலகுப்பிள்ளை - தங்கப்பிள்ளையின் அன்பு மகன் இராசா (13—01—2000) நேற்றுக் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற கனகரட்ணம் (கோப்பாய்) அவர்களின் அன்புச் சகோதரரும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மதேவி, புவனராசா, புஸ்பராசா, புவனதயாபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலகணேசன் (காசாளர், பொறுப்பாளர், தெல்லிப்பழை M.P.C S), ரட்ணஸ்வரி, சசிகலா ஆகியோரின் மாமனாரும், நடராஜா யோகத்மன், அருள்பாலயோகன், கிஷோவர்மா, விபூஷனி, சுகிர்தினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று (13—01—2000) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ந. பாலகணேசன்
(தெல்லிப்பழை M. P. C. S)

சேவிஸ் ஸ்ரேசன் லேன்,
றொட்டியாலடி,
உடுவில் கிழக்கு.
சுன்னாகம். (72690)

## திருமதி சேவியர் பிரான்சிஸ்கா

திருமதி சேவியர் பிரான்சிஸ்கா 13 - 01 - 2000 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்வம் — றோஸ் என்பவர்களின் அன்பு மகளும் F. A. சேவியரின் அன்பு மனைவியும் நேரியஸ், யொறின், கஸ்ரன், பியேந்திரன், அருட்திரு ஜேம்ஸ் (பங்குத் தந்தை, அச்சுவேலி), சில்வியா, ஆன்சலம், சுஜேந்தி, அன்ரனிக் கிறிஸ்ரி ஆகியோரின் அன்புத் தாயாரும் பர்ணபாஸ், நிக்சன், சகாயராணி, கொன்சி, றெஜினா என்பவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (15 - 01 - 2000) சனிக்கிழமை காலை 9.00 (பு. நே) மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதன் பின்னர் நல்லடக்கத்திற்காக பூதவுடல் புனித சொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருட்திரு X. W. ஜேம்ஸ்
(மகன்)

126, பாங்சால் வீதி,
குருநகர்.
புதுமை மாதா கோயில் அண்மையில்). (72701)

# யாழ். நீதிமன்றில் 2 நாள்களே வழக்கு

யாழ்ப்பாணம், ஜன. 14

அடுத்த மாதத்தின் இருந்து வாரத்தில் இரண்டு நாள்கள் மட்டுமே யாழ். நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வாரத்தில் 5 நாள்கள் நடைபெற்று வந்த வழக்கு விசாரணைகள் இனிமேல் திங்கள், வெள்ளி ஆகிய இரண்டு நாள்களே நடைபெறவுள்ளன. புதன் கிழமைகளில் ஊர்காவற்றுறை நீதிமன்றிலும் செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் மல்லாகம் நீதிமன்றிலும் வழக்கு விசாரணைகள் நடைபெறும்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம் ஆகிய மூன்று நீதிமன்றங்களின் நீதிவானாக ஒருவரே கடமையாற்றி வருவதால் மேற்படி ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ–10)


## புலமைப்பரிசில் - 2000

22 ஆவது பரீட்சையில்
அதி கூடிய புள்ளி
பெற்றோர்

ச. லக்ஷிகா
யா/ இ. ஆ. பா.
சே. மதுரிகா
யா/ இ. ம. ஆ. பா.
ற. பிரிகஸ்விலி
யா/ இ. ஆ. பா
ஜெ. கிருத்திகா
யா/ இ ஆ. பா.
அ. பிரியதர்சன்
யா/ இ. ஆ. பா.
க. கஜனன்
யா/ இ. ஆ. பா.
வி. கவினா
யா/ இ. ஆ. பா.
அ. கிறிஷனி
வசாவிளான்
சிறிவேலுப்பிள்ளை வித்.
சி. வித்தியாசாகர்
யா/ உரும்பிராய்
சை. த. வித்
அ. டினேஸ்
யா/ இ. ஆ. பா.

அடுத்த பரீட்சை
16 - 01 - 2000

BOND யாழ் நகர்.
(72693)



## ராஜா
யாழ்ப்பாணம்
அஜித் - சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
### அவள் வருவாளா
10.30, 2.30
[சி/10487]



## லிபேட்டி அச்சுவேலி
சாய்குமார்
நடித்த
### நாகபந்தம்
(குடும்பச் சித்திரம்)
காட்சிகள்: 10.30, 2.30
T. P. 070-212223
070-212678
[72561]



## நாகலக்ஸ்
சுன்னாகம்
சரத்குமார், தேவயானி
(இருவேடம்)
நடித்த
### சூரிய வம்சம்
(ரீஸ்ஸ்)
இனிய பாடல்கள்
நிறைந்தது.
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
[72697]


# மரண அறிவித்தல்கள்

## அருளானந்தம் வள்ளியம்மை

நெடுந்தீவு மத்தியை சேர்ந்த அருளானந்தம் வள்ளியம்மை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மாரிமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை அருளானந்தம் (நொத்தாரிஸ் கிளாக், புங்குடுதீவு) அவர்களின் அன்பு மனைவியும் தங்கம்மா சிவகுருநாதன் (பதிவாளரும் மரண விசாரணை அதிகாரியும், செட்டிகுளம்), அப்பையா, காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, மகேந்திரன் (நொத்தாரிஸ் கிளாக், புங்குடுதீவு) ஆகியோரின் தாயாரும் சதாசிவம் (அம்பலப்பெருமாள்குளம்), பவானி (செட்டிகுளம்), புவனேஸ்வரி (கட்டைக்காடு, தர்மபுரம்), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி (ஆசிரியை), புஸ்பவதி (பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் மாமியுமாவார்.

தகனக் கிரியைகள் 13-01-2000 வியாழக்கிழமை நெடுந்தீவு கட்டைராமன் சல்லி மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
அ. அப்பையா
(மகன்)

நெடுந்திவு மத்தி,
நெடுந்தீவு. (சி/10635)

## கணபதிப்பிள்ளை இராசதுரை

(ஓய்வுபெற்ற குடிவரவு, குடியகல்வு ஆணையாளர், கொழும்பு)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசதுரை அவர்கள் 11-01-2000 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் அன்னபூரணி (பூமணி - ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குழந்தைப்பிள்ளை – மரியப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மகன் (அமெரிக்கா) குகன் (அமெரிக்கா), ஜெகன், சுமித்திரன் (லவன்-அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஐறின் (அமெரிக்கா), ஜொய்ஸ் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியங்கா, அமின்டா ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னத்துரை, காலஞ்சென்ற செல்வரத்தினம், குமாரவேலு, காலஞ்சென்ற சுப்பிரமணியம், அன்னம்மா, அன்னலட்சுமி, சரஸ்வதி, மகேஸ்வரி, குணமணி, நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாபரா நேசம், பிலோமினா, மேரி திரேசா, மெற்றில்டா இராசதுரை, அரியதுரை, துரை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை (15-01-2000) சனிக்கிழமை காலை 8-30 மணியளவில் (மு.நே) அவரது இல்லத்தில் இருந்து பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்த பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பூமணி இராசதுரை
(மனைவி)

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு. (72702)

## அம்பலவாணர் இராமலிங்கம்

இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பலவாணர் இராமலிங்கம் 13-01-2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நேசம்மாவின் அன்புக் கணவரும் சண்முகநாதன், காலஞ்சென்ற கைலாயநாதன், இலங்கநாதன் மற்றும் கலாவதி, பாலசுப்பிரமணியம், பிரசாபதி (சுவிஸ்), யோகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சகுந்தலாதேவி, கந்தசாமி (பெஷன் ஹவுஸ்), மல்லிகாதேவி, மகாலட்சுமி (சுவிஸ்), தயாபரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்சினி, நிரஞ்சினி, பிரதீபன், சாந்தீபன், கிருஷ்ணகுமாரி, அபிராமி, ரம்ஜா, கௌரிசங்கர், பார்த்தீபன் (பிரான்ஸ்), பரந்தாமன், எழில்ராஜி, வாமலோஜனன், பாலகிரீசன், வைஷ்ணவன், வைஷ்ணவி, கோபிகிருஷ்ணா, மயூராஜ், பிரியங்கா (சுவிஸ்), தர்ஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, முருகேசு, கதிரித்தம்பி, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசம்மா, நீலசுலோசனாதேவி, காலஞ்சென்றவர்களான சோதிப்பிள்ளை, பஞ்சலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-01-2000) நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த கந்தசாமி.
(மருமகன்)

காரைக்கால்,
இணுவில் கிழக்கு. (72706)

# விளையாட்டரங்கு

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் இன்றைய ஆட்டங்களின் விவரம்

கொழும்பு, ஜன. 14

19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நான்கு ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

நியூஸிலாந்து அணி பங்களாதேஷ் அணியை எதிர்த்து காலி சர்வதேச விளையாட்டரங்கிலும் —

இந்திய அணி ஹொலன்ட் அணியை எதிர்த்து மாத்தறை விளையாட்டரங்கிலும், —

தென்னாபிரிக்க அணி கென்யா அணியுடன் கேகாலை விளையாட்டரங்கிலும் —

பாகிஸ்தான் அணி நேபாள அணியை எதிர்த்து கண்டி அஸ்கிரிய விளையாட்டரங்கிலும் —

விளையாடவுள்ளன.

(ஐ-8-4)

## வேகப்பந்து வீச்சாளர் அக்தர் வீதி விபத்தில் தப்பினார்!

சிட்னி, ஜன. 14

பாகிஸ்தான் அணியின் அதிவேகப்பந்து வீச்சாளர் சொய்ப் அக்தர் ஆஸ்திரேலியாவில், வீதி விபத்திலிருந்து மயிரிழையில் தப்பியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் தலைநகர்ப் பெருந்தெருவில் அக்தர் நடந்து வந்து கொண்டிருந்த போது 9 வயதுச் சிறுவன் ஒருவன் தெருவைக் கடப்பதற்கு குறுக்கே பாய்ந்ததாகவும் —

அதேவேளை அதிவேகமாக வந்து கொண்டிருந்த ஜீப் ஒன்று அதே பாதையில் வந்ததாகவும் —

சிறுவனைப் பாய்ந்து காப்பாற்றி வீதியின் ஓரமாக வீழ்ந்த அக்தருக்கு ஒரு மீற்றர் தொலைவில் ஜீப் 'ப்ரேக்' போட்டு நின்றதால் அவர்கள் உயிர்தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சொய்ப் அக்தரின் சர்ச்சைக்குரிய பந்து வீச்சையும், அது தொடர்பாக ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட அதிருப்தியையும், நடைபெற்ற இந்தச் சம்பவத்தையும் நோக்குகையில் இது ஒரு சதி முயற்சியாகக்கூட இருக்கலாம் என விளையாட்டு அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(ஐ-8-4)

### மற்றொரு கருத்துக் கணிப்பில்

## நூற்றாண்டின் சிறந்த வீரராக சச்சின் டெண்டுல்கர் தெரிவு

புதுடில்லி, ஜன. 14

'ஜய்க் ஹின்' என்ற இன்டர்நெற் தளம் நடத்திய கருத்துக் கணிப்பின்படி இருபதாம் நூற்றாண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக சச்சின் டெண்டுல்கர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பின்படி 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த துடுப்பாட்டக் காரராக 2 ஆயிரத்து 900 வாக்குகளைப் பெற்று சச்சின் டெண்டுல்கரும் —

சிறந்த பந்து வீச்சாளராக ஆயிரத்து 422 வாக்குகளைப்பெற்று தற்போதைய இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கபில்தேவும் —

சிறந்த சகல துறை ஆட்டக்காரராக 629 வாக்குகளைப் பெற்று கபில்தேவும் —

20 ஆம் நூற்றாண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக 2 ஆயிரத்து 872 வாக்குகளைப் பெற்று சச்சின் டெண்டுல்கரும் தெரிவாகி உள்ளனர்.

(ஐ-8-4)

### ஒரு நாள் சர்வதேசப் போட்டி

## நியூஸிலாந்து அணியினர் 20 ஓட்டங்களால் வெற்றி

வெலிங்ரன், ஜன. 14

நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையே நியூஸிலாந்தில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டியை நியூஸிலாந்து அணி 20 ஓட்டங்களால் வென்று ஐந்து போட்டிகள் கொண்ட தொடரை 5-0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 302 ஓட்டங்களைக் குவித்தது. றொஜர் டுவஸ் 97 ஓட்டங்களையும் நதான் அஸ்ட்லே 85 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது. கம்பல் 71 ஓட்டங்களையும், க்றிபித் 37 ஓட்டங்களையும், லாரா 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக றொஜர் டுவஸ் தெரிவு செய்யப்பட்டார்.

(ஐ. 8-4)

## ஷேன்வோர்ன் ஆட்டங்களில் பங்குபற்றார்

சிட்னி, ஜன. 14

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச்சாளர் ஷேன்வோர்னின் காலில் ஏற்பட்ட தசைப்பிடிப்பின் காரணமாக அவர் இன்னும் ஒரு மாத காலத்துக்குக் கிரிக்கெட் ஆட்டங்களில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாகத் தொடரும் 'கால்டன் அன் யுனைட்டெட்', தொடரில் ஆஸ்திரேலிய அணிக்கு ஷேன்வோர்னின் இழப்பு ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கிரிக்கெட் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

[ஐ-8-4]

### யாழ். மாநகரசபைப் பகுதியில்

# சித்த ஆஸ்பத்திரிகளுக்கு இருபது லட்சம் ரூபா நிதி

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். மாநகரசபை ஆயுர்வேத சித்தவைத்திய சாலைகளின் செயற்பாடுகளுக்கெனப் புதிய ஆண்டுக்கு 20 லட்சம் ரூபா நிதி யாழ். மாநகர சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

மாநகரசபைப் பகுதியில் 9 ஆயுர்வேத வைத்திய நிலையங்கள் இயங்குகின்றன, அவை அரியாலை, கொழும்புத்துறை, கொய்யாத்தோட்டம், குருநகர், நாவாந்துறை, நீராவியடி, நாச்சிமார்கோயிலடி, நல்லூர் யாழ். நகர்ப் பகுதிகளில் இயங்குகின்றன.

இந்த நிதியிலிருந்து வைத்தியசாலைக்கான உபகரணங்கள் கொள்வனவு மற்றும் மூலிகைத் தோட்டங்கள் என்பன அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை பிரதம சித்த வைத்திய அதிகாரி டாக்டர் ப. வேதநாதன் தெரிவித்தார்.

(ஐ-9)

## திருக்குறள் மனனப் போட்டி

வலிகாமம்தெற்கு, ஜன. 14

வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையே திருக்குறள் மனனப் போட்டி இடம்பெற உள்ளது.

இப்போட்டிகள் கோட்ட மட்டத்தில் நடைபெற்று பின்னர் வலய மட்டத்தில் நடைபெறும்.

கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் மூன்று மாணவர்கள் வலய மட்டப் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

வலய மட்டத்திலான போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி இடம்பெறும்.

(ஐ - 154)

## மலையகத்தில் குண்டு மீட்பு

கொழும்பு, ஜன. 14

தலவாக்கொல்லை நகரப் பகுதிக்கு மின் வழங்கும் — நகரின் மையத்திலுள்ள - பிரதான மின்மாற்றிக்கு அருகே 150 கிராம் எடையுள்ள குண்டு ஒன்று நேற்று முன்தினம் காலை கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

இதனை அடுத்து தலவாக்கொல்லை நகரில் தேடுதலும் நடத்தப்பட்டது.

(உ-7-150)

## மட்டக்களப்பில் தேடுதல்

மட்டக்களப்பு, ஜன. 14

மட்டக்களப்பு நகரப்பகுதி நேற்று முன்தினம் மாலை படையினரால் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

லேடி மனிங் வீதி, பாரதி வீதி ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்த படையினர் வீடுகளைச் சோதனையிட்டதோடு, பலரை விசாரணைக்கு உட்படுத்தினர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தாண்டவன்வெளிப்பகுதியில் தேடுதல் நடத்திய பொலீஸார், பொலீஸில் பதிவு செய்யாத ஒன்பது தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

(உ-7-150)

## விலை மதிப்பீட்டு அலுவலகம் இடம்மாறும்

யாழ்ப்பாணம், ஜன. 14

இதுவரை காலமும் யாழ். கன்னாதிட்டி வீதியில் இயங்கி வந்த விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மாவட்டக் காரியாலயம் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் காங்கேசன்துறை வீதியில் உள்ள யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மாடிக்கட்டடத்தில் இயங்க உள்ளது.

சங்கக் கட்டடத்தின் முதலாவது மாடியில் இந்தக் காரியாலயம் இயங்கவுள்ளது.

(ஐ-9-17)

## சித்த மருந்துப் பாவனை குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 14

குடாநாட்டு மக்கள் மத்தியில் சித்த மருந்துகளின் பாவனை அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக யாழ். மாநகர ஆயுர்வேத சித்த வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி சைலயா சிவராஜா தெரிவித்தார்.

கடந்த வருடம் மட்டும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் சித்த மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் —

தேமல், வாதம், கிரந்தி, மந்தம் போன்ற குழந்தைகளுக்கான சிகிச்சைகள், ஆஸ்மா போன்றவற்றுக்கு பெரும் எண்ணிக்கையானோர் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-9)

### நெல்லியடியில்

## இலங்கை வங்கிக் கிளையில் திருடுவதற்கு நடந்த முயற்சி

நெல்லியடி, ஜன. 14

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளை மற்றும், அதனை அண்டியுள்ள 2 வீடுகளில் நேற்றுமுன்தினம் இரவு திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கை வங்கியின் பின்பக்க யன்னல் ஊடாக வங்கியினுள் பிரவேசித்த திருடர்கள் அங்குள்ள அனைத்து லாச்சிகளையும் திறந்து கிளறியுள்ளனர்.

அத்துடன் தாம் அணிந்து வந்த பிளாஸ்ரிக் முகமூடிகள் இரண்டையும் அங்கு விட்டுச் சென்றுள்ளனர்.

வங்கிக்கு அருகில் உள்ள வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கு இருந்து லுமாலா சைக்கிள் ஒன்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

அதேவேளை அந்தப்பகுதியில் உள்ள மற்றொரு வீட்டினுள் நுழைந்த திருடர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த பெண் ஒருவரின் 2 பவுண் சங்கிலி ஒன்றை அறுத்துச் சென்றுள்ளனர். தாம் அணிந்து வந்த முகமூடி ஒன்றையும் அங்கு விட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நெல்லியடி பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-7-109)

## கணக்காளர் வெற்றிடங்கள் தற்காலிகமாக நிரப்பப்படும்

வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட திணைக்களங்களில் கணக்காளர் பதவிக்கு நிலவும் வெற்றிடங்களை தற்காலிகமாக நிரப்புவதற்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஐந்து வருடங்களுக்குக் குறையாத எழுதுநர்சேவையுடன் கணக்கியல் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமைகளைக் கொண்டவர்களும் — கணக்குப் பதிவுநர் சேவையின் முதலாம் தரத்தைச் சேர்ந்தவர்களும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் க. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தற்காலிக பதவியில் அமர்த்தப்படுவோருக்கு பதில் கடமைச் சம்பளம் வழங்கப்படும் எனவும் —

நிரந்தரக் கணக்காளர்கள் நியமிக்கப்பட்டதும் இந்தப் பதவி வெறிதாக்கப்படும் எனவும் —

தற்போது பதில் கடமையாற்றுபவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் — அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எழுதுநர் சேவையின் முதலாந்தரத்தைச் சேர்ந்தவர்களை இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்படாதது குறித்து அவர்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-7)

### நேர்முகப் பரீட்சைக் கடிதம் தாமதம்

## பதவி உயர்வுக்கான வாய்ப்பை அதிபர்கள் பலர் இழந்தனர்!

வலிகாமம் தெற்கு, ஜன. 14

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் உரிய காலத்தில் கிடைக்காமையினால் யாழ்ப்பாணத்தில் உள்ள பல பாடசாலை அதிபர்கள் தமது பதவி உயர்வுக்கான சந்தர்ப்பத்தை இழந்துள்ளனர்.

அதிபர் தரம் மூன்றில் கடமையாற்றிவரும் அதிபர்களை தரம் இரண்டிற்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைகள் கல்வி அமைச்சினால் இம் மாதம் 8 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட்டன.

இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமை புரியும் தரம் மூன்றைச் சேர்ந்த பல அதிபர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட இந் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்கள் யாவும் இங்குள்ள அதிபர்களுக்கு இம்மாதம் 10 ஆம் திகதியே கிடைத்துள்ளன.

உரிய காலத்தில் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் கிடைக்காமையால் இவர்களால் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமற் போய்விட்டது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போய்விட்ட அதிபர்கள் தமக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்குமாறு அதிபர்கள் சங்கங்கள், ஆசிரியர் தொழிற் சங்கங்கள் மூலம் கோரியுள்ளனர்.

(ஐ-135)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச்

# சித்திவிநாயகர் தேவஸ்தானம்

**சங்காபிஷேகம் (1008)**

நிகழும் 2000 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி 15—01—2000 சனிக்கிழமை அதிகாலை சித்தி விநாயகப் பெருமானுக்கு நவோத்தர சங்காபிஷேகமும் (1008) ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகமும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

பூர்வாங்கக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (14—01—2000) பிற்பகல் ஆரம்பமாகும்.

சங்காபிஷேகத்தின் பின் சித்திவிநாயகப்பெருமான் ஊஞ்சலில் எழுந்தருளி பூசை — வழிபாட்டின் பின் விஷேட மங்கள வாத்திய சகிதம் வீதி உலாவந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

அன்றைய தினம் அடியவர்கள் யாவரும் எம்பெருமானைத் தரிசித்து நலமே வாழ்வார்களாக!

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

பிரதம குரு:-

சிவாகமரத்னா
சிவஸ்ரீ தியாக. கெங்காதரக்குருக்கள்

ஆலயகுரு:-

பிரம்மஸ்ரீ சோ. பாலகிருஷ்ணசர்மா

சுபம்

(72626) உபயகாரர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/ அச்சுவேலி மகாவித்தியாலயம்

க. பொ. த. உயர்தர பெறுபேறு 1999

| | |
|---|---|
| செல்வன் சி. இளந்திரையன் | கலை 3 ஏ 1பி |
| செல்வி இ. லக்கி | கலை 3 ஏ 1 சி |
| செல்வி யோ. பிறேமினி | கலை 2 ஏ 1 பி 1 சி |
| செல்வி சி. றங்கலா | கலை 1 ஏ 1 பி 2 சி |

இவர்களுடன் 85% மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளார்கள். இவர்களையும் இவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(72672)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லத்துரை உலகநாதன் J.P.

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)

மலர்வு: 1928 - 06 - 05 உதிர்வு: 1995 - 01 - 09

திதி: மார்கழி பூர்வபக்க அட்டமி (14-1-2000)

செத்தபின்னும் சேவை செய்யும்
செந்தண்மையாளனென
இத்தரையில் இன்றும் நீர்
எங்களுடன் வாழ்கின்றீர்
உத்தமரே ஆண்டு ஐந்து
ஓடிமறைந்தாலும்
நித்தமும் உங்கள் பெயர்
மந்திரமாய் நிலைத்திருக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சுற்றத்தார்.

'உதயகிரி,
பலாலி தெற்கு,
வயாவிளான்.

தற்போதைய முகவரி:
நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(72575)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். மாவட்டத்தில் சிறுதொழில், சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்காக மாவட்ட செயலகத்தினால் அண்மையில் நடத்தப்பட்டு வந்த பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில்வைத்து யாழ். அரச அதிபரினால் வழங்கப்படவுள்ளது.

வடமாகாண மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் நிதி உதவியுடனும் மற்றும் இலங்கை வங்கியின் அனுசரணையுடனும் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

6 பிரிவுகளாக நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் 115 பேர் பயிற்சிநெறியை முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளனர். இவர்களில் நாவலர் மண்டபத்தில் 24 பேரும் கரவெட்டியில் 23 பேரும் பல்கலைக்கழகத்தின் யாழ். சிற்றி ஹோலில் 58 பேரும் சங்கானை பிரதேச செயலகத்தில் 15 பேரும் பயிற்சி பெற்றுள்ளனர். (உ-9)

# முன்பள்ளி கட்டடம் அமைப்பு

நெல்லியடி, ஜன. 14

ஆவரங்கால் மத்திய சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிக் கட்டடம் 2 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

வலி கிழக்கு பிரதேச சபை ஒரு லட்சம் ரூபாவை வழங்கியிருந்தது மிகுதி ஒருலட்சமும் அப்பகுதி மக்களினால் வழங்கப்பட்டது. (உ-109)

# மின் இணைப்பு

கொக்குவில், ஜன. 14

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க கட்டடத்திற்கு கடந்த வாரம் முதல் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த வளாகத்தில் அமைந்துள்ள பத்திரிகை படிக்கும் பகுதி இரவு 7-30 மணிவரைதிறந்துசெயற்பட்டு வருகின்றது.

(க-69)

# எஸ்.எம்.ஏ. பால்மா தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 14

ஆறு மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கான எஸ். எம். ஏ. பால்மாவுக்கு யாழ்ப்பாணப் பகுதியில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் குழந்தைகளின் பெற்றோர் இவ் வகை பால்மாவைத் தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

(உ-15)

# வீதி திருத்தம்

புன்னாலைக்கட்டுவன்
ஜன. 14

பல ஆண்டு காலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக காட்சியளித்த ஈவினைப் பிரதேச வடக்கு வீதியைப் பொது மக்களும் இளைஞர்களும் சேர்ந்து சிரமதானம் மூலம் திருத்தம் செய்துள்ளனர்.

மழை காலங்களில் இப்பாதையூடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் கற்களையும் மக்கிகளையும் அன்பளிப்பாக வழங்கி இளைஞர்களைக் கொண்டு வீதியைத் திருத்தினர்.

இந்த வீதித் திருத்தத்துக்கு யாழ். கல்வி வலய சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர் பன்னீராயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

(க-133)

# [ 2000 ]

## புத்தாயிரம் ஆண்டை வரவேற்று

வலி. தென்மேற்கு

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்

நடத்தும்

# கலை விழா

தலைவர்: **திரு. கா. சந்திரராசா**
(பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)

இடம்: **யா / மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை**

காலம்: **16 - 01 - 2000 ஞாயிற்றுக்கிழமை**
காலை 9-00 மணி முதல்
(இலங்கை நேரப்படி)

## நிகழ்ச்சி நிரல்

காலை நிகழ்ச்சிகள்:- 9-00 மணி முதல்

பிரதம விருந்தினர்: **திரு க. சண்முகநாதன்**
(யாழ். அரச அதிபர்)

சிறப்பு விருந்தினர்: **திருமதி ச. யோகேஸ்வரன்**
(அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

மங்கள இசை:
**மானிப்பாய் கண்ணன் குழுவினர்**

மங்கள விளக்கேற்றல்:
தமிழ்த்தாய் வாழ்த்து:
**திருமதி லோ. குலேந்திரன்**
(ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி)

வரவேற்பு நடனம்: **கலைக்கோவில், மானிப்பாய்.**

வரவேற்புரை: **திரு. அ. அமிர்தலிங்கம்**
(சமூக சேவைகள் அலுவலர்)

தலைமையுரை:

ஆசியுரை:
**பிரம்மஸ்ரீ எஸ். பாலசண்முகக்குருக்கள்**
(பிரதம குரு, சிரணி நாகம்மாள் கோயில்)
**வண. ஆ. யேசுதாசன் அடிகளார்**
(தென்னிந்திய திருச்சபை)

பிரதம விருந்தினர் உரை:

கவிதை: **'' புத்தாயிரமே வா வா ''**
திரு. இரா. துரைராசா (கிராம அலுவலர்)

கதம்பம்: விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம்
(வாழ்வகம், மானிப்பாய்)

நாதஸ்வர இசை: இணுவில் நாதஸ்வர வித்துவான்
கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர்

நாடகம்: **மயான காண்டம்**
(இளந் தொண்டர் சபை, இணுவில்)

நன்றியுரை: **திரு. க. ஸ்ரீபதி**
(கிராம அபிவிருத்தி அலுவலர்)

மாலை நிகழ்ச்சிகள்:- பிற்பகல் 2-00 மணி முதல்

பிரதம விருந்தினர்: **திரு. து. வைத்திலிங்கம்**
(யாழ். மேலதிக அரசாங்க அதிபர்)

சிறப்பு விருந்தினர்:
**வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்**
(வலி. தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்)

நாட்டிய நாடகம்:
திருமதி செல்வாம்பிகை வீரசிங்கத்தின் நெறியாள்கையில் மானிப்பாய் கலைக் கோவில் மாணவிகள் வழங்கும்
**'' குற்றாலக் குறவஞ்சி ''**

இசை அரங்கு:

| | |
|---|---|
| செல்வி பரமேஸ்வரி கணேசன் | — பாட்டு |
| செல்வன் கா. குகபரன் | — வயலின் |
| திரு. எஸ். மகேந்திரன் | — மிருதங்கம் |

நடனம்: **குறவர் நடனம்**
நெறியாள்கை: செல்வி ஸ்ரீதேவி சந்திரராசா

இசை நாடகம்: **சத்தியவான் சாவித்திரி**
யா / கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

தென்மோடி நாட்டுக் கூத்தும் கரகமும்:
**வேத நூல்**
யா / கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்

நாட்டிய நாடகம்:
**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்**
நெறியாள்கை: செல்வி ஸ்ரீதேவி சந்திரராசா

நாடகம்: **வெளிநாட்டு மாப்பிள்ளை**
சண்டிலிப்பாய் பிரதேச செயலக அலுவலர்கள்

நன்றியுரை.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதேச செயலரும்
அனைத்து அலுவலரும்.

பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.

(72667)

## நெடுஞ்செழியனின் இறுதிச் சடங்கு இன்று

சென்னை, ஜன. 14

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகரும் அ. தி. மு. க. வின் முத்த தலைவர்களுள் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியனின் இறுதிக் கிரியைகள் இன்று சென்னையில் நடைபெற உள்ளன.

அவரது பூத உடல் நேற்று அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. தமிழக முதல்வர் மு. கருணாநிதி, எதிர்க்கட்சித் தலைவியும் முன்னாள் முதல்வருமான செல்வி ஜெயலலிதா ஆகியோர் உட்படப் பல தலைவர்கள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

## அணு ஆற்றலை பாக். வளர்க்கும்

இஸ்லாமாபாத், ஜன. 14

பாகிஸ்தான் அணு வெடிப்புத் தொடர்பான ஆராய்ச்சிகளைத்தொடர்ந்து பேணி அணு ஆயுதங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ளும் என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் சர்தார் தெரிவித்தார்.

நாடு தனது பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு எதிராக நம்பகமான அணுஆயுத ஆற்றலை உறுதிப்படுத்திக் கொள்ளும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## சர்ச்சை

றோம், ஜன. 14

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின்உடல் நிலை அவர் தமது கடமைகளைச் சரிவரச்செய்வதற்குத் தடையாக இருப்பதால் தாம் ஓய்வு பெறுவதைப் பற்றி அவர் சிந்திக்க வேண்டும் என ஜேர்மனியின் பிரபல மேற்றிராணியாரான கார்ல்லெமன் கூறியுள்ளார். அவரது கூற்று இத்தாலியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது

## சீனா எச்சரிக்கை

பீஜிங், ஜன. 14

திபெத்தில் இருந்து தப்பி வந்து இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள கர்மபாலாமாவுக்கு இந்தியா அரசியல் தஞ்சம் வழங்கக்கூடாதென சீனா எச்சரிக்கை செய்துள்ளது.

கர்மபாலாமாவுக்கு இந்தியா அரசியல் தஞ்சம் வழங்குமானால் அது இந்திய—சீன உறவுகளை மிக மோசமாகப் பாதிக்கும் என்று சீன வெளியுறவுப் பேச்சாளர் சூ. பங்சாவோ தெரிவித்தார்.

## பிள்ளைகளை வளர்ப்பதில் பாட்டிமாரின் உரிமை என்ன?

### அமெரிக்காவில் விசித்திர வழக்கு

நியூயோர்க், ஜன. 14

பேரப்பிள்ளைகளைப் பார்க்கும் உரிமை அவர்களது தாத்தா பாட்டிகளுக்கு உண்டா? இல்லையா? என்ற விவகாரம் தொடர்பான விசித்திரமான வழக்கு ஒன்று அமெரிக்க உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் வழங்கப்படும். வழக்கின் முடிவு எவ்வாறானதாக இருந்தாலும் இந்த வழக்கு தலைமுறையினருக்கு இடையில் உள்ள உறவுகளின் எதிர்காலத்தை கேள்விக்கு உள்ளாக்கி இருப்பதாக சமூகவியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வழக்கை பேரப்பிள்ளைகள் உள்ள 6 நீதிபதிகள் அடங்கிய 9 நீதிபதிகள் கொண்ட குழு விசாரணை செய்ய உள்ளது.

தாத்தா, பாட்டிமார் உட்பட பெற்றோர் தவிர்ந்த ஏனைய குடும்ப உறுப்பினர்களின் தலையீடு இல்லாமல் தமது குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் உரிமையை அமெரிக்க அரசமைப்பு பெற்றோருக்கு உறுதிப்படுத்தி உள்ளதா இல்லையா என்பது குறித்து இந்த வழக்கில் நீதிமன்றம் முடிவு செய்யும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். [ஐ—6]

## பங்களாதேஷ் விமானம் கடத்தப்படும் என மிரட்டல்!

டாக்கா ஜன. 14

பங்களாதேஷில் உள்ள சகல விமான நிலையங்களினதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உடனடியாகத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியாவின் கல்கத்தா விமான நிலையத்தில் இருந்து டாக்கா நோக்கிச் செல்ல இருந்த பங்களாதேஷ் விமானம் கடத்தப்படப்போவதாக அநாமதேய மிரட்டல் ஒன்று கிடைக்கப்பெற்றது. இதனை அடுத்து அந்த விமானம் தீவிரசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் டாக்காவுக்குப் பயணமானது.

அண்மையில் காத்மண்டுவில் இருந்து புறப்பட்ட இந்தியன் எயார் லைன்ஸ் விமானம் கடத்தப்பட்டதை அடுத்து இவ்வாறான மிரட்டல்கள் குறித்து விமான நிலைய அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

இந்த மிரட்டலை அடுத்து பங்களாதேஷ் விமானங்கள் பயணிக்கும் அனைத்து விமான நிலையங்களிலும் அந்த விமானங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பங்களாதேஷ் அரசாங்கம் அந்தந்த நாட்டு அரசுகளிடம் கோரி உள்ளது.

(ஐ-6)

## மரண தண்டனை தற்காலிக நிறுத்தம்

இஸ்தான்புல். ஜன. 14

குர்திஷ் இன கெரில்லாத் தலைவரும் துருக்கிய நீதிமன்றினால் மரண தண்டனை விதிக்கப்பட்டவருமான அப்துல்லா ஒகலனின் மரண தண்டனையை நிறைவேற்றுவதை துருக்கிய அரசாங்கம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

# இந்தியாவில் தங்கிவிட கர்மபா லாமா முடிவு

தரம்ஸாலா, ஜன, 14

சீனக்கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தில் இருந்து தப்பி வந்து இந்தியாவின் ஹிமாச்சலப் பிரதேசத்தில் தங்கி உள்ள கர்மபாலாமா (Karmapalama) தொடர்ந்து தான் தரம்ஸாலாவிலேயே தங்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.



திபெத்தில் இருந்து ஒரு புனித யாத்திரையாகவே தான் தரம்ஸாலாவுக்கு வந்ததாகவும் தனது கல்வியை அங்கு தொடரப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

திபெத்தில் இருந்து தப்பி வந்த பின்னர் சில நாள்கள் ஓய்வு எடுத்துக் கொண்ட கர்மபாலாமா நேற்று முன்தினம் தன்னைச் சந்தித்த ஹியாத்சென் நாம் ஹியால் தலைமையிலான சிக்கிம் லாமாக்கள், மற்றும் அஜய் மங்கோட்டியா தலைமையிலான இந்தோ— திபெத் நட்புறவுச் சங்க பிரதிநிதிகள் ஆகியோரிடம் பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

14 வயதேயான கர்மபாலாமா திபெத்தின் பௌத்த மத தலைவர்களில் மூன்றாவது இடத்தில் இருப்பவர். சீன அரசின் கட்டுப்பாட்டில் இருந்த அவர் தனது மதக்கல்வியைத் தொடர விரும்பினார். எனினும் அவருக்கு மதக்கல்வியை அளிக்கக் கூடிய லாமாக்கள் எவரும் திபெத்தில் இல்லை. இதனால் அவர் இந்தியா சென்று கல்வி கற்க விரும்பினார். ஆனால் சீன அரசு அதற்கு அனுமதி வழங்கவில்லை. இதனை அடுத்தே — தனது மதக் கல்வியைத் தொடர்வதற்காக — கர்மபாலாமா இந்தியாவுக்குள் வந்திருக்கலாம் என்று தற்போது கருதப்படுகின்றது. அவர் இதுவரை இந்திய அரசிடம் அரசியல் தஞ்சம் கோரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விவகாரம் இந்திய — சீன உறவுகளில் விரிசலை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.

(ஐ-6)

## 5 விமான நிலையங்கள் தனியாரிடம் ஒப்படைப்பு

புதுடில்லி, ஜன. 14

இந்தியாவில் உள்ள ஐந்து பெரிய விமான நிலையங்களை நீண்டகால ஒப்பந்தத்தில் தனியார் நிறுவனங்களிடம் கையளிப்பது என்று மத்திய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

டில்லி, மும்பை, கல்கத்தா, சென்னை, பெங்களூர் ஆகிய இடங்களில் உள்ள விமான நிலையங்களே தனியார் நிறுவனங்களிடம் குத்தகைக்கு விடப்பட உள்ளன. 30 முதல் 59 ஆண்டுகள் வரை இந்த விமான நிலையங்கள் குத்தகைக்கு விடப்பட உள்ளன. சர்வதேச தராதரத்திற்கு அமைய இந்திய விமான நிலையங்களைப் பேணுவதற்கே அவற்றை தனியார்வசம் ஒப்படைக்க உள்ளதாக அமைச்சரவை தெரிவித்துள்ளது. (ஐ—6)

## அமெ. விமானங்கள் ஈராக் மீது தாக்குதல்!

ஈராக்கின் வடபகுதியில் உள்ள ஏவுகணை நிலைகள் மீது அமெரிக்காவின் ஜெற் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக சவூதி அரேபியாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்க படைகளின் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எனினும் அமெரிக்க போர் விமானங்கள் பொதுமக்கள் இலக்குகள் மீதே தாக்குதல் நடத்தின எனவும் —

அத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும்—

பக்தாத் தெரிவித்துள்ளது.

வழமையான ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த அமெரிக்க போர் விமானங்கள் மீது ஈராக்கியர்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர். இதை அடுத்து விமானங்கள் அந்த ஏவுகணைத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தி அவற்றுக்குப் பாரிய சேதத்தை விளைவித்தன என்று அமெரிக்கத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. [ஐ—6]

# உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச யுத்தத்துக்கு அழைப்பு?

### இஸ்ரேல், இந்தியா கூட்டாக விடுக்கும்

புதுடில்லி, ஜன. 14

பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேசரீதியான யுத்தம் ஒன்றுக்கு இந்தியாவும் இஸ்ரேலும் இணைந்து கூட்டாகக் கோரிக்கை விடுக்கலாம் என்று பி. ரி. ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த்சிங் எதிர்வரும் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் முதற்றடவையாக இஸ்ரேலுக்கு விஜயம் செய்யும் போது இரு நாடுகளும் இணைந்து இந்த அழைப்பை விடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவும் - இஸ்ரேலும் வெவ்வேறு வழிகளிலான பயங்கரவாத அச்சுறுத்தல்களை தத்தமது மண்ணில் எதிர் கொண்டுள்ளன. இஸ்லாமியத் தீவிரவாதத்தின் பொது எதிரிகளாக இஸ்ரேலும் அண்மைக்காலத்தில் இந்தியாவும் உருவெடுத்துள்ள நிலையில் இந்த இரு நாட்டுக் கூட்டு முக்கியத்துவம் பெறுவதாக அவதானிகள் கூறுகின்றனர். (ஐ-6)

## நர்மதா அணைகட்டுவதற்கு அருந்ததி ரோய் கடும் எதிர்ப்பு

புதுடில்லி. ஜன. 14

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்தில் நர்மதா அணைக்கட்டு அமைக்கப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய பிரபல எழுத்தாளர் அருந்ததி ரோய் உட்பட 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

அணைக்கட்டு அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்த போது தமது கட்டளையை மீறியதற்காக கைது செய்யப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

'த கோட் ஒவ் சிமோல் திங்ஸ்' என்ற நாவலுக்காக புக்கர் பரிசுபெற்ற அருந்ததி ரோய் நர்மதா அணைக்கட்டு திட்டத்தைக் கடுமையாக எதிர்த்து வருகிறார். இத் திட்டத்தால் பல கிராமங்கள் பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-6)

**உலக அரங்கில்**

## முக்கிய தீவிரவாதக் குழு அல்ஜீரியாவில் கலைப்பு!

### பொது மன்னிப்பை அடுத்து

அல்ஜியர்ஸ், ஜன. 14

அல்ஜீரியாவின்முக்கியதீவிரவாத இயக்கமான அல்ஜீரியா 'இஸ்லாமிக் சல்வேஷன் ஆமி' என்ற அமைப்பு கலைக்கப்படுவதாக அதன் தலைவர்கள் அறிவித்துள்ளனர். இந்த அமைப்பைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் கெரில்லாக்களுக்குப் பொதுமன்னிப்பு அளிக்கப்படுவதாக ஜனாதிபதி அறிவித்ததை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

லட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டு இரத்த ஆறு ஓடிய அல்ஜீரியாவில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியாக முக்கிய தீவிரவாதக்குழுவுடன் அரசு செய்து கொண்ட உடன்பாட்டை அடுத்து இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட்டு வருகின்றது. அதேசமயம் வேறு சில குழுக்கள் இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

(ஐ—6)

## அமைச்சரவையில் மாற்றங்கள்

ரஷ்யாவின் தற்போதைய பதில் அதிபர் விளாடிமிர் புடின் தனது அமைச்சரவையில் திடீர் மாற்றங்களைச் செய்துள்ளார். இரண்டு முதல் நிலைத் துணைப் பிரதமர்கள் பதவி இறக்கப்பட்டுள்ளதுடன் நிதி அமைச்சர் மிகேல் காஸியனோ முதல் நிலைத் துணைப்பிரதமராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

துணைப் பிரதமர்களில் ஒருவரான மிக்கயேல் அஸ்டினான்கோ அப் பதவியில் இருந்து இறக்கப்பட்டார் எனினும் அவர் தொடர்ந்தும் ரயில்வேத் துறை அமைச்சராகப் பதவி வகிப்பார்.

(இ—6-9)

# குடாநாட்டின் சனத்தொகை 4 லட்சத்து 98 ஆயிரத்து 286

## செயலகப் புள்ளி விவரங்கள் மூலம் மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஜன. 14

குடாநாட்டின் தற்போதைய மொத்த சனத்தொகை 4 லட்சத்து 98 ஆயிரத்து 286 பேர் என யாழ். செயலகத்தினால் கணிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடைசியாக கடந்த 99ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெறப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே இந்த எண்ணிக்கை கணிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் தற்போது மொத்தம் ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 130 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளனர்.

குடாநாட்டில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின் பின்னர் வன்னி மாவட்டங்களில் குடியேறிய மக்கள் தற்போது குடாக்கடல் ஊடாகவும், திருகோணமலையில் இருந்து 'லங்கா முடித்த' கப்பல் மூலமாகவும் மீளக்குடியேறுவது அதிகரித்துள்ளதுடன் குடாநாட்டில் இடம்பெற்று வரும் பிறப்புக்கள் மூலமும் குடாநாட்டின் சனத்தொகையில் வளர்ச்சி ஏற்பட்டு வருவதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

கடந்த 99 ஒக்ரோபர் மாதத்தை விட நவம்பர் மாதக் கணிப்பீட்டில் 599 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் கடந்த நவம்பர் மாதம் திருகோணமலையில் இருந்து 'லங்கா முடித்த' கப்பல் மூலம் வந்து குடாநாட்டில் மீளக்குடியேறியவர்களாவர்.

குடாநாட்டின் 15 பிரதேச செயலர் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக யாழ். செயலகத்தால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின்படி சனத்தொகை எண்ணிக்கை வருமாறு:-

★ காரைநகர் — ஆயிரத்து 724 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 179 பேர்.
★ வேலணை — 3 ஆயிரத்து 114 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 506 பேர்.
★ ஊர்காவற்றுறை — 4 ஆயிரத்து 815 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 700 பேர்.
★ யாழ்ப்பாணம் — 13 ஆயிரத்து 73 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 982 பேர்.
★ நல்லூர் — 18 ஆயிரத்து 266 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 931 பேர்.
★ சண்டிலிப்பாய் 11 ஆயிரத்து 785 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 744 பேர்.
★ சங்கானை — 10 ஆயிரத்து 865 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 389 பேர்.
★ உடுவில் — 13 ஆயிரத்து 514 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 837 பேர்.
★ தெல்லிப்பழை — 4 ஆயிரத்து 738 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 337 பேர்.
★ கோப்பாய் — 17 ஆயிரத்து 446 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 642 பேர்.
★ சாவகச்சேரி — 19 ஆயிரத்து 673 குடும்பங்களைச் சேர்ந்த 71 ஆயிரத்து 871 பேர்.
★ கரவெட்டி—13 ஆயிரத்து 567 குடும்பங்களைச் சேர்ந்த 41 ஆயிரத்து 875 பேர்.
★ பருத்தித்துறை — 11 ஆயிரத்து 697 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 238 பேர்.
★ மருதங்கேணி — 8 ஆயிரத்து 953 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 985 பேர்.
★ பளை — ஆயிரத்து 900 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 70 பேர். (ஐ-9)

## புத்தாயிரமாண்டு குழந்தைகளுக்கு சேமிப்புக்கணக்கு

தென்மராட்சி, ஜன. 14

புத்தாயிரம் ஆண்டின் முதல் நாளான ஜனவரி முதலாம் திகதி பிறந்த குழந்தைகளுக்கு இலங்கை வங்கி பிள்ளையின் பெயரில் சேமிப்புக் கணக்கொன்றினை ஆரம்பித்து வழங்கியுள்ளது. சேமிப்புக் கணக்கில் ரூபா 500 வைப்பிலிடப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பளை வண்ணான் கேணியைச் சேர்ந்த கணேந்திரராசா றொபீக்கா என்னும் குழந்தைக்கு சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையினால் இந்தச் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அதற்கான பாஸ் புத்தகம் குழந்தையின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதாக இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் ஏ.ரி. ஏ. தேவராசா தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஜனவரி முதலாம் திகதி குழந்தைகள் பிறந்திருந்தால் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கிளையுடன் தொடர்பு கொண்டு சேமிப்புக் கணக்குப் புத்தகத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்தார். (ஐ-117)

## தனியார் வங்கியின் மூலம் புலிகளுக்கு நிதி உதவி?

### சீ. ஐ. டியினர் விசாரணை

கொழும்பு, ஜன. 14

கொழும்பில் உள்ள பெரும் வர்த்தகர்கள் சிலர் தனியார் வங்கி மூலம் புலிகளுக்கு லட்சக்கணக்கில் பணம் வழங்கினரா என்பது குறித்தும் —

இந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் கடந்த மாதம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக்கொல்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கும் இடையில் தொடர்புகள் உள்ளனவா என்பது குறித்தும்— குற்றப்புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தனியார் வங்கி ஒன்றின் சிரேஷ்ட நிர்வாகி ஒருவரின் மனைவிக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றுக்கு 5 கோடி ரூபா கடன் வழங்கப்பட்டது தொடர்பாகவும் —

மத்திய வங்கியின் சட்டவிதிகளை மீறி இந்தப் பணம் எவ்வாறு வழங்கப்பட்டது என்றும்— குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## மாணவருக்கு அன்பளிப்புகள்

அளவெட்டி, ஜன. 14

அளவெட்டி மேற்கு முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தினர் தமது நிலையத்தின் எல்லைப் பரப்புக்குள் வசிக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மாணவ, மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள், பேனா, பென்சில் என்பனவற்றை இலவசமாக வழங்கியுள்ளனர்.

அளவெட்டி மேற்கு கிராம உத்தியோகத்தர் செல்வி செ. மாலாதேவி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அன்பளிப்புப் பொருள்களை மாணவர்களுக்கு வழங்கினார். (ஐ-13)

## விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 13 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு.

**சாவகச்சேரி**

(126102ஏ), (126102பி), (126102சி), (126102டி), (126102ஈ), (134900ஏ), (134900பி), (134900சி), (134900டி), (134900ஈ), (133900எவ்), (134909ஏ).

**யாழ்ப்பாணம்**

(122824ஏ), (122824பி), (122824சி), (126855ஏ), (126855பி), (126855சி), (126855டி), (128386ஏ), (128432ஏ), (128493ஏ), (128493பி), (128493சி), (128511ஏ), (128511பி), (128515ஏ), (128516ஏ), (128516பி), (128516சி), (128516டி), (128538ஏ), (128542ஏ), (128550ஏ), (128639ஏ), (128715ஏ), (128715பி), (128758ஏ), (128758பி), (130023ஏ), (130023பி), (130024ஏ), (130024பி).

**யாழ்ப்பாணம்**

(130053ஏ), (130073ஏ), (130073பி), (133424ஏ). (133768ஏ), (133785ஏ) (133785பி), (133785சி), (133785டி), (133785ஈ), (133785எப்), (133785ஜி, (133785எச்)..

**கோப்பாய்**

[128600ஏ], [128600பி], [133583ஏ], [133584ஏ]

**மருதங்கேணி**

[0850106ஏ],[0850107ஏ]

**நல்லூர்**

[133620ஏ], [133620பி], [133715ஏ], [133716ஏ], [133716பி], [133716சி].

**பளை**

[129365ஏ], [129365பி].

## மேலும் 19 ஆயிரம் குடும்பங்களுக்கு சமுர்த்திநிவாரணம் வழங்கவேண்டும்

### யாழ். அரச அதிபர் அரசாங்கத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். மாவட்டத்தில் மேலும் 19 ஆயிரம் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திடம் விண்ணப்பித்துள்ளோம்.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் நடத்தப்பட்ட புனரமைப்பு, நிவாரணம், மீள் சமரச நடவடிக்கைகளுக்கான செயல் வரைபு ஆய்வுப் பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

உலகவங்கி, கொழும்பு மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்த ஆய்வுப் பட்டறை இணையத்தின் தலைவர் பொ. விக்கினேஸ்வரன் தலைமையில் யாழ். பஸ்தியன் ஹோட்டலில் நடைபெற்றது.

அரச அதிபர் அங்கு மேலும் உரையாற்றும்போது கூறியதாவது.—

யாழ். குடா நாட்டில இடம்பெற்ற பாரிய இடம் பெயர்வுக்குப்பின் மக்கள் இது வரையும் முழுமையாக மீளக் குடியமரவில்லை.

இந்த இடம் பெயர்வின் போது வன்னியிலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் சென்றவர்களில் 25 ஆயிரம் குடும்பங்கள் யாழ். மாவட்டத்துக்கு மீண்டும் வந்து குடியமர்வதற்கு தயாராகவுள்ளதாக அந்த மாவட்டங்களிலுள்ள அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் இடம்பெற்ற இடம்பெயர்வு முதல் இடம்பெயர்வுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

1990 ஆம் ஆண்டில் தீவுப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். அன்று அங்கு 80 ஆயிரமாக விருந்த குடிப்பரம்பல் இன்று 5 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

யாழ். குடாநாட்டில் 56 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்டிருந்த காங்கேசன்துறைத் தொகுதியில் இன்று எவருமே மீளக் குடியமரவில்லை.

கடந்த 15 வருடங்களாக மக்கள் சுழற்சி முறையில் இடம் பெயர்ந்து கொண்டேயிருக்கிறார்கள்.

யாழ். மாவட்டத்தின் சனத்தொகை ஒரு கோடிக்கு அதிகமாக (10 மில்லியன்) தற்பொழுது இருக்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி 4 லட்சத்து 98 ஆயிரத்து 286 பேரே இங்கு வசிக்கிறார்கள். 50 வீதத்துக்கும் குறைவானவர்களே மீளக் குடியேறியுள்ளனர்.

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் 8 லட்சத்து 25 பேர் வசித்தனர். அப்பொழுது ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வின் போது 2 லட்சத்து 6 ஆயிரத்து 10பேர் வெளியேற முடியாத நிலையிலிருந்தனர். சிவில் நிர்வாகம் திரும்பவும் புனரமைக்கப்பட்ட பின் வடக்கு—கிழக்கில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மேலும் ஒரு சிவில் நிர்வாகம் செயற்பட்டு வருகிறது. யாழ். மாவட்டத்தில் இந்த நிலையேற்படவில்லை.

மீளக்குடியேறிய பின்னர் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளை மாற்றியமைப்பதற்கு பல திட்டங்களைத் திட்டினோம். இவற்றில் 'யாழ்ப்பாண திட்டம்' ஒரு மைல் கல்லாகும்.

துறைசார்ந்த 14 திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு சில திட்டங்களை நிறைவேற்றி வருகின்றோம்—

இப்படி அவர் மேலும் கூறினார். [ஐ-5]

## வீட்டில் சாராயம் விற்ற இருவருக்கு அபராதம்

நெல்லியடி, ஜன. 14

சட்டவிரோதமாக சாராயம் வீடுகளில் வைத்து விற்பனை செய்துவந்த இருவர் வல்வெட்டித்துறைப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

ஆதிகோயிலடி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சரவணமுத்து துரைசாமி (வயது 45), இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேந்திரன் (வயது 40)ஆகிய இருவருமே பொலீஸாரினால் கடந்த 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் வல்வெட்டித்துறைப் பொலீஸார் புதன் கிழமை காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம் முதலாம் சந்தேக நபரை ஆயிரத்து ஐநூறு ரூபாவும், இரண்டாவது சந்தேகநபரை 2 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார். (ஐ-109)

## நூல் அறிமுக விழா

சித்திரமேழி இளவாலை பழநி ஆனந்த அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் நூல் அறிமுக விழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் சித்திரமேழி ஞானவைரவர் ஆலய கிழக்கு வீதி மண்டபத்தில் கலாநிதி க.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும்.

சைவப் புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசுவின் ''இறையியல் தத்துவமும் வழிபடு முறைகளும் பகுதி 1'', ''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்'' ஆகிய நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்படும்.

அறிமுக உரையை சைவப் புலவர் சு. செல்லத்துரை நிகழ்த்துவார். [ஐ-100]

# உதயன்

## மீண்டும் திபெத் பிரச்சினை

திபெத்தின் ஆத்மீகத் தலைவர்களில் ஒருவரும் சீனா மற்றும் திபெத் அரசியல் தலைவர்களினால் அங்கீகரிக்கப்பட்டவருமான 14 வயது நிரம்பிய கர்மாபா திபெத்தில் இருந்து இந்தியாவுக்குத் தப்பி வந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ஒரு புறத்தில், ஏற்கனவே கீழ் மட்ட நிலையில் உள்ள சீன—இந்திய உறவில் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறது. மறுபுறத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளாக அடங்கிப் போய் இருந்த திபெத் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கைக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப் போகிறது.

1959 ஆம் ஆண்டு சீன ஆட்சியாளர்களுக்கு எதிராக திபெத்தில் அப்போதைய ஆத்மீகத் தலைவர் தலாய்லாமா தலைமையில் கிளர்ச்சி ஏற்பட்ட சமயம் அந்தக் கிளர்ச்சியை அடக்க சீன அரசு திபெத்துக்கு இராணுவத்தை அனுப்பியது. தலாய்லாமாவும் அவரது ஆதரவாளர்களும் திபெத்திலிருந்து இந்தியாவுக்கு தப்பிவந்து இந்தியாவின் ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ள தரம்சுாலா என்ற இடத்தில் போட்டி அரசாங்கம் ஒன்றை அமைத்திருந்தனர். தலாய்லாமாவுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் இந்திய அரசியல் தஞ்சமும் அளித்திருந்தது.

தலாய்லாமா இந்தியா தப்பிச் சென்ற பின்னர் சீன அரசு தனக்கு ஆதரவான லாமாக்களை திபெத்தின் உயர் ஆட்சிப் பீடத்தில் நியமித்தது மூலம் திபெத் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை சர்வதேச நாடுகளின் பார்வையில் இருந்துமறைத்துவந்தது. இதில் ஓரளவு வெற்றியும் கண்டிருந்தது.

இப்படியாக சீனத் தலைவர்களின் அங்கீகாரத்துடன் ஆத்மீகத் தலைவராக வந்தவர் தான் கர்மாபா. அவர் இந்தியாவுக்குத் தப்பிவந்தது சீனாவுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி விட்டுள்ளது.

திபெத் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை ஏற்குமாறு சர்வதேச நாடுகள் சீனாவுக்கு நிர்ப்பந்தம் கொடுக்க கர்மாபா விவகாரம் வழிகோலி விட்டுள்ளது. திபெத் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு தற்பொழுது அமெரிக்கா கோரிக்கை விடுத்திருப்பது சீன ஆட்சியாளர்கள் இனியும் இந்தப் பிரச்சினையைத் தட்டிக்கழித்துவிட முடியாது என்பதைக் கோடி காட்டுகிறது.

உலகில் இரு பெரும் நாடுகளான சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு சீர்குலைந்து போனதுக்கும் நீண்டகாலமாக இருந்துவந்த எல்லைத் தகராறு 1962 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையில் நேரடி யுத்தமாக வெடிப்பதற்கும் தலாய்லாமா விவகாரமும் ஒரு காரணம் ஆகும். ஆகவே திபெத் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஆசியாவில் அமைதி நிலவுவதற்கு அவசியம் ஆகும். சமாதானமான முறையில் பிரிட்டனிடமிருந்து ஹொங்கொங்கையும் போர்த்துக்கலிடமிருந்து மக்காவ்வையும் பெற்றுக்கொண்ட சீனா, திபெத் மக்கள் விவகாரத்தில் கடைப்பிடிக்கும் கடினமான போக்கைக் கைவிடவேண்டும்.

அதேசமயம் யூகோஸ்லாவியாவில் கொஸோவோ மக்களின் போராட்டத்தையும் ரஷ்யாவில் செச்சினிய மக்களின் போராட்டத்தையும் அங்கீகரிக்கும் சர்வதேச சமூகம் திபெத் மக்களின் உரிமைக்குக் குரல் கொடுக்க வேண்டும்.

# பாரினில் உயர் பக்தியை வளர்த்திடும் மார்கழிப்பாவை நோன்பு மகத்துவம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவைப் பாடல்களும் ஸ்ரீ ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடல்களும், எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள அரும் பெரும் பொக்கிஷங்களாகும். மார்கழி மாதம் முழுவதும் இப்பாடல்கள் ஆலயங்களில் ஒலிக்கும் வேளை நம்மைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும்.

கன்னிப் பெண்கள் விரும்பி நோற்பதால் இது பாவை நோன்பு என்று அழைக்கப்பட்டது.

தமிழர்கள் நெடுங்காலமாக வழிவழியாக அனுஷ்டித்து வந்ததுதான் பாவை நோன்பு. பாவை நோன்பானது சமய அடிப்படைக் கருத்துக்களை வற்புறுத்தி ஒற்றுமையை வளர்த்துப் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஓர் ஊடகமாகப் பயன்பட்டது.

பாவை என்பது ''கண்ணின் பாவை'' பதுமை, சித்திரப் பதுமை போன்ற பொருள்களில் கையாளப்படுகின்றது. இப் பாவை நோன்பு இரண்டு கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது. ஒன்று நாடுசெழித்தல் மற்றையது நல்ல கணவனை அடைதல்.

நாடு செழிப்புற வேண்டுமாயின் மாதம் மும்மாரி பெய்யவேண்டும். வானம் பொய்த்தால் நாட்டில் பஞ்சம் பசி, பட்டினி உண்டாகும். இதனைப் போக்கவே கன்னிப் பெண்கள் ஆற்றங்கரையில் மணலால் பதுமை அமைத்துப் பனிநீராடி நோற்கும் நோன்பே பாவை நோன்பு ஆகும். இதனால் ''தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து என்றும் — பசுக்களானது வள்ளன்மை பொருந்தியவைவாக பாலை நிறைப்பனவாக அமைவதையும் —

### ஞானக் கதிர்

''சீர்த்த முலைபற்றி வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்'' என்று திருப்பாவையின் மூன்றாவது பாடலில் இருந்தும் அறிய முடிகின்றது.

திருப்பாவைப் பாடல்கள் ''நல்ல கணவனை நாடுதல்'' என்ற வெளிக்கருத்தை வைத்துக் கொண்டு ஜீவாத்மாக்கள் பரமாத்மாவை நாடும் தன்மையில் அமைந்துள்ளன.

ஒரு பெண்ணுக்குக் கிடைக்க வேண்டியது ஒரு நல்ல கணவன். ஒரு நல்ல வரனை அடைவதற்கு சக்தியான அம்பிகையை வழிபடுவதற்காகக் கன்னிப் பெண்கள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி ஆற்றங்கரையில் நீராடி மணலில் பாவை அமைத்து தம் வேண்டுகோளை நிறைவேற்றுமாறு பணிகின்றனர்.

''உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்: அன்னவரே எங்கணவராவார் அவருகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்: இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்'' என வரும் திருவெம்பாவைப் பாடலிலும் கன்னிப் பெண்களின் உள்ளக் கிடக்கை வெளிப்படுவதைக் காணக் கூடியதாயிருக்கின்றது.

அத்துடன் கோபியர்,

''நந்த கோபன் குமரன் நாயகனாய் வந்திடவே
வணங்கும் இச்சிறுமிக்கு நல்லவரம் தந்திடுவாய்''

என்று வழிபாடு செலுத்தினர். இதனை அறிந்த ஆண்டாளும் தன்மனதில் கண்ணனை அடைய வேண்டும் என்ற விருப்புடன் பாடப் பெற்ற பாடல்களே இவை.

தட்சணாய கால முடிவான மார்கழிமாதம் ஒரு பிரம்ம முகூர்த்த காலம். இக்காலத்தில் இறைவனை வழிபடுவதால் ஒரு வருடத்தில் வழிபட்ட பயனை அடைய முடிகின்றது. வைஷ்ணவ ஆலயங்களில் இந்த முப்பது நாள்களும் அடியவர்கள் திருப்பாவை பாடி திருமாலின் பெருமையை வியந்துபிரார்த்தனை செய்து கொள்வார்கள்.

ஆகவே, உலகைக் காக்கும் பரம்பொருளான மகாவிஷ்ணுவின் பேரருளுக்குப் பாத்திரமாக மார்கழி மாத பாவை நோன்பு மிகவும் இன்றியமையாதது.

''கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே''

★

— எஸ். கே. என். தவராஜா

## சுகாதாரச் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன. 14

'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் சுகாதாரம் பற்றிய மூன்றாம் கட்டச்சுவரொட்டிகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தச் சுவரொட்டிகள் 'மதுபானமும் போதைவஸ்தும் முறிந்த குடும்பங்களை உருவாக்கும்' இதனை உணர்ந்து செயற்படுவீர் என்ற அறிவுறுத்தலை வெளிப்படுத்துவதுடன் வர்ணப் படங்களோடு வெளியாகியுள்ளன.

சுவரொட்டிகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள நிறுவனங்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

### உதயவாக்கு

ஆசையின் வார்த்தைகள் எப்போதும் மதுரமாகவே இருக்கும். கனத்த மழை நீண்டு பெய்யாது.

-- பங்கிம் சந்திரர்

## நாளை

தை 01

சனிக்கிழமை

திதி: நவமி

நள்ளிரவு 12.27 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

பிற்பகல் 2. 45 வரை.

தைப்பொங்கல் திருநாள்

சுபநேரம்: 3.34—5.04

ராகுகாலம்: 9.34—11.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சோதனைக் கெடுபிடி குறித்து கடற்படை அதிகாரிக்கு முறையீடு

யாழ்ப்பாணம், ஜன. 14

வலி. மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொன்னாலைப் பகுதியில் உள்ள கடற்படையினரால் பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட கோயிலுக்குச் செல்லும் பொதுமக்களும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவது தொடர்பாக வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவரும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான நா. திருலோகநாதன்வடபகுதி கடற்படைத் தளபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடற்படையினரின் தீவிர சோதனைகள் மூலம் அப்பகுதி மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைச் சுட்டிக்காட்டியும்—

அவற்றைத் தீர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஈ. பி.டி. பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் யாழ். மாவட்ட பொறுப்பாளர் வி. கே. ஜெகனுக்கும் இது தொடர்பாக தொலைபேசியூடாகத் தெரியப்படுத்தியுள்ளதாகவும்—

திரிலோகநாதன் தெரிவித்தார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் நுழைவாயிலுக்கு சமீபமாக கடற்படையினர் காவலரண் அமைத்துள்ளனர். அவ்வழி ஊடாகப் பாடசாலைக்குள் செல்லும் அதிபர் முதல் கொண்டு சகல ஆசிரியர்கள், மாணவர்களும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். குறிப்பாக ஆசிரியைகளிடம் அவர்கள் வேண்டத்தகாத முறைகளில் சோதனைகளை மேற்கொள்கின்றனர்.

மாணவர்கள், ஆசிரியர்களின் புத்தகப்பைகள் மற்றும் கைப்பைகள் அனைத்தும் கிண்டிக் கிளறப்பட்டு சோதனை செய்யப்படுவதுடன், சகலரும் கடுமையான உடற்சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை—

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களும் இவ்வாறான கடற்படையினரின் கடும்சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். —

அர்ச்சனைத் தட்டில் பழவகை, பூக்கள் எடுத்துச் செல்லும் பக்தர்களும் அவற்றைக்கிண்டிக்கிளறிச் சோதனையிடப்படுகின்றனர் —

மக்கள் ஆலயங்களுக்குச் சென்று கடவுளை வழிபட்டுச் செல்லும் போதிலாவது நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் செல்ல வழி செய்யப்பட வேண்டும்.

கடற்படையின் இத்தகைய செயற்பாடுகள் குறித்து பொதுமக்களிடம் இருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதைத் தொடர்ந்து கடற்படையினரின் அரண்களுக்கு நேரில் சென்று அவர்களின் இத்தகைய செயற்பாடுகளை அவதானித்துள்ளோம் — என்றும் திரிலோகநாதன் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

## தையல் பயிற்சி நெறி

நல்லூர் பிரதேச செயலர் பிரிவினால் தையல் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடத்தப்பட்டு வரும் இப்பயிற்சி நெறிக்கு 17 வயதுக்கு மேற்பட்ட 8 ஆம் வகுப்பு கல்வி பயின்றவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

வண்ணார்பண்ணையில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ள இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புபவர்களை எதிர் வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளருக்கு விண்ணப்பத்தை அனுப்பும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொங்கல் விழாக்கள்

வலிகாமம்தெற்கு, ஜன. 14

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் நாளை சனிக்கிழமை தைப்பொங்கல் சிறப்பு விழா நடைபெற உள்ளது.

நிலையத் தலைவர் இ. சிவநாயகம் தலைமையில் சனசமூக நிலைய வளாகத்தில் பிற்பகல் 2 மணிக்கு சிறப்பு விழா ஆரம்பமாகும்.

அன்றைய தினம் சனசமூக நிலையத்தினரினால் சிரமதான அடிப்படையில் புதிதாக அமைக்கப்பட்ட வீதி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படும்

மறுசீரமைக்கப்பட்ட நிலைய முன்பள்ளி, சிறுவர் பூங்கா என்பனவும் திறந்து வைக்கப்பட உள்ளன.

(ஐ-154)

★ ★ ★

அரியாலை, ஜன. 14

யாழ். திருமறைக்கலாமன்றம் நடத்தும் பொங்கல்விழா நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

வண. பிதா றெக்ஸ்சொன்ஸ் ரன்சரன் தலைமையில் நடைபெறும் விழாவில் பொங்கல், பண்பாட்டுத் திருப்பலி என்பன இடம்பெறவுள்ளன.

(ஐ-17)

★ ★ ★

நெல்லியடி சனசமூக நிலையத்தின் பொங்கல் விழா, நாளை பிற்பகல் 2 மணிக்கு தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் ஆசிரியர் ஆ. சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபைச் செயலர் எஸ். பசுபதி, நெல்லியடி கிராம அலுவலர் எஸ். பிரபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(ஐ-109)

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறி விட்டது

அருமைநாயகம் அமிர்த ராணி என்பவரது தேசிய அ. அட்டை(40842489V) விசேட அ.அட்டை, 'பாஸ்' உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய ''பேஸ்'' 9. 1. 2000 இல் யாழ்ப்பாணத்தில் இருந்து மிருசுவில் செல்லும் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்துஉபதபால் அலுவலகம் புளியங்கூடல், ஊர்காவற்றுறைஎனும்முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(72670)

ஏழாலை தெற்கு சூராவத்தையைச் சேர்ந்த மகேஸ்வரன் மங்களரூபன் ஆகிய எனது தே. அ. அட்டை (791223083V)10. 01. 2000 அன்று மருதனார்மடத்துக்கும் – மல்லாகத்துக்கும்இடையில் கே. கே. எஸ். வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரூபன் இலத்திரனியல் பழைய பொலீஸ் நிலையத்தடி கே. கே. எஸ். வீதி. சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(72673)

பாலன் வரதராஜா ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (521063629V–0903010863) அச்சுவேலிச் சந்தையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுபா பல்பொருள் வாணிபம் அச்சுவேலி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(72659)

திருச்செல்வம் சுகந்தி என்பவரது தேசிய அ. அ. (இல. 696092109V) யும், விஷேட அ. அ.(இல. 0907007022) யும் குளப்பிட்டிக்கும் உடுவில் அம்பலவாணர் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து காயத்திரி அரைக்கும் ஆலை, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(72677)

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் லண்டன் நிரந்தர இருப்பு உரிமை பெற்றவரும் ஆயிலியம் நட்சத்திரம் கிரகபாவம் 29, 5 அடி 11 அங்குல உயரமுடைய 33 வயது B. Sc. Eng. மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. லண்டனில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். குடிதமூலம் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 53/4, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(72676)

### விற்பனைக்கு

Honda 50 Lancer Custom (பச் மொடல்) ஆகப்பிந்தியது எம்மிடம் விற்பனைக்கு உண்டு. கணபதி ஸ்ரோர்ஸ், இல. 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(72646)

நல்ல நிலையில் உள்ள Yamaha News Mate - 80 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: சிவராசா 97, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(72679)

நல்ல நிலையில் உள்ள ஆண்கள் துவிச்சக்கர வண்டி (Humber), பெண்கள் ((Lumala) புதியது, குளிர்சாதனப்பெட்டி (Kenwood), Singer தையல் மெஷின், Stand fan (Mitsubishi) Table fan உடன் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் மாலை 5 மணிக்குப் பின் A. Sritharan, No. 42, St. Annes Lane, Pandiyan-thalvu. Chundikuli.

(72676)

### ஆங்கிலம் விசேடமாக

பாடசாலையில் ஆங்கிலத்தில் உயர்ந்த மதிப்பீடுகள் பெறுபேறுகள் பெற ஆண்டு 6 – O/L வரை, A/L, பட்டப்படிப்பு ஆங்கிலம் (Spoken English) கற்பிக்கப்படும் ஆசிரியர் B.Sc(Cey) London Inter, 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம் திருநெல்வேலி. (72649)

### தேவை

பயிற்சி நிலையம் ஒன்று நடத்துவதற்குப் பிரதான வீதிகளில் (மாநகரசபை எல்லைக்குள்) அல்லது அதனை அண்மித்த பகுதிகளில் வீடு அல்லது பகுதியான வீடு வாடகைக்குத் தேவை. உடன் தொடர்பு கொள்க. திரு. துரைராஜா, இல. 34, ஜமுனா வீதி, சட்டநாதர் கோயிலடி, நல்லூர்.

[72612]

### இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். [72619]

## ENGLISH Spoken And Grammar

புதிய பிரிவு ஆரம்பம்

(திங்கள், புதன்)

(மாலை 4. 30 ப. நே.)

நாள்: 17-01-2000

நேரம்: மாலை 4. 30

(பழைய நேரம்)

இடம்: கொக்குவில்.

(ஞானபண்டிதர் அருகில்)

(சி/10633)

# கரையோரப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு யாழ். பிரிவிலேயே நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து சென்றுவேறு இடங்களில் தங்கியுள்ளவர்களுக்குரிய நிவாரணம் யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் மட்டுமே வழங்கப்படும்.

இது பற்றிய அறிவுறுத்தலை யாழ். பிரதேச செயலாளர் ஏனைய பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்துள்ள கரையோரப் பகுதி மக்களுக்குரிய நிவாரணத்தை யாழ்ப்பாணத்திலேயே வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையால் ஏனைய பிரதேசசெயலாளர் பிரிவுகளில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியதில்லை என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச செயலர் பிரிவில் மக்கள் இடம்பெயர்ந்த கிராம அலுவலர் பிரிவுகளாக ஜே — 61, ஜே— 62, ஜே — 64, ஜே — 65, ஜே — 67, ஜே — 68, ஜே— 69 ஆகிய ஏழு கிராம அலுவலர் பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஜ-86)

## மேலும் நான்கு புலிகள் உயிரிழப்பு

வவுனியா, ஜன.14

'ஓயாத அலைகள்-3' படை நடவடிக்கையில் மேலும் நால்வர் தமது தரப்பில் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு: —

★ இன்பநிலா (மயில்வாகனம் கன்னிகாராணி– யாழ்ப்பாணம்.)

★ வர்த்தனா (நடராசா லதா- யாழ்ப்பாணம்)

★ தமிழ்விழி (கந்தசாமி மகேஸ்வரி - மட்டக்களப்பு)

★ எல்லைப்படை வீரரான ராமலிங்கம் கிருஷ்ணகுமார் (கிளிநொச்சி) [ஜ-8]

## ஆலயத்தில் பூசைகள் இல்லை

தென்மராட்சி, ஜன. 14

இயக்கச்சிப் பகுதியில் நிலவும் யுத்த நிலைமைகளால் மல்வில் கிருஷ்ணன் கோயில், திரியாய் அம்மன் கோயில் ஆகியவை கடந்த மூன்று வாரகாலமாக பூஜைகள் இன்றி மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கோயில்களின் பூசகர்களும் இடம்பெயர்ந்துள்ளனர். (உ-117)

## தரம் ஒன்று கால்கோள் விழா

கொக்குவில், ஜன. 14

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் தரம் ஒன்று கட்டக் கால்கோள்விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ். சண்முககுமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க. சுப்பிரமணியம் கலந்து கொள்வார்.

[ஜ-69]

# 31 ஆம் நாள் நினைவு வழிபாடு



இணுவில்

திருமதி

## தேவராணி சுந்தரலிங்கம்

திருமகளாய்த் தினமும் திகழ்ந்து
திருநிறைந்த வாழ்வு தந்து
அதிதிகளாய் அவனியிலே விழா
அனுதினமும் கண்டு
துணை மகளாய் நின்ற — எம்
தாயவளே — அன்னையே!
வணங்குகிறோம்.

**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரன்.**

இரா. சுந்தரலிங்கம் (கணவர்)
(முன்னாள் வடமாநிலக் கல்வி அதிபதி),
Dr. சு. சுதர்சன் (மகன்)
(அரசினர் வைத்தியசாலை, வவுனியா),
திருமதி சுபாசினி செல்வவிநாயகன் (மகள்)
மு. செல்வவிநாயகன் (மருமகன்)
(பொட்ஸ்வானா),
திருமதி இரத்தினேஸ்வரி சுதர்சன் (மருமகள்),
திருமதி சின்னம்மா தம்பியையா (தாயார்).

''செல்வானந்த வாசா'',
இணுவில் மேற்கு,
இணுவில்.

[சி/10631]

# இசை நிகழ்ச்சி ஒத்திவைப்பு

வண். வடமேற்கு ஆனைக்கோட்டையில்
எழுந்தருளியுள்ள

## ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள்

ஆலய மேம்பாட்டு நிதிக்காக 14 – 01 – 2000 தினத்தன்று நடத்தப்பட இருந்த இசை நிகழ்ச்சி தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அம்பாள் பக்தர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேற்படி இசை நிகழ்ச்சி மகாசிவராத்திரி தினத்தன்று நடைபெறும்.

(72678) செயலாளர்

# முக்கிய அறிவித்தல்

## வட்டு. கிழக்கு. துறட்டிப்பனை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

எமது காலஞ்சென்ற தந்தையாரும்,
மேற்படி தேவஸ்தான காப்பாளரும்,
பரம்பரைத் தர்மகர்த்தாவுமாகிய

## மாரிமுத்து பொன்னுத்துரை

அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட புனருத்தாரணத்
திருப்பணிச் சபையின் தலைவரான

## திரு. நா. ஜெயரஞ்சிதன்

என்பவரினால், மல்லாகம் நீதிமன்றத்தில், நம்பிக்கைச்சொத்து / 05 என்ற இலக்கத்தில் எங்கள் இருவருக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, மல்லாகம் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட விவகாரம் அல்ல என்று தெரிவித்து 11—01—2000 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் தற்போதைய காப்பாளர்களும், தர்மகர்த்தாக்களும் ஆகிய நாங்கள் மேற்படி புனருத்தாரண திருப்பணியை, சபையை இன்று முதல் கலைத்துவிடுகிறோம். இன்றிலிருந்து கோயிலின் திருப்பணி வேலைகள் தொடர்பாக அன்பளிப்புகள் வழங்க இருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும், மற்றும் இந்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேக திகதி வெகுவிரைவில் அடியார்களுக்கு எம்மால் அறிவிக்கப்படும் என்பதனையும் பணிவன்புடன் அறியத்தருகிறோம்.

1. பொ. நவரத்தினராசா,
2. பொ. இரத்தினராசா.

தேவஸ்தான காப்பாளர்களும்,
தர்மகர்த்தாக்களும்.

(72682)

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில் |
| --- | --- |
| 05 — 06 — 1939 | 30 — 01 — 1993 |

## அமரர் ஜெகா செந்தில்நாதன்

(முன்னாள் அரச அதிபர்)

திதி: 14 - 01 - 2000

அன்பென்னும் பாசத்தை அள்ளிச் சொரிந்து
நெஞ்சினில் நினைவலைகளை நீங்காது வளர்த்து
பாசமுடன் ஒரு வார்த்தை கூறாது
மின்னலென விண்ணோடி மறைந்தனையோ?
கண்ணுக்குள் இருக்கும் கருணை உருவம்
காற்றினிலே பறந்தனையோ – அப்பா!
நடமாடும் தெய்வமே!! படமாகி வீட்டினிலே
ஒளியாகி விட்டீரோ இருளாகிக் கிடக்கும் எம்துயரை
ஒளியாக்கி வைப்பது யார் அப்பா?

நித்தம் உங்கள் நினைவால் வாடும்
**தாய், மனைவி, மக்கள், மருமக்கள், பேரன், சகோதரர்கள், மாமா, மாமி**
மற்றும் குடும்பத்தினர்.

30, ஓடை லேன்,
வண்ணார்பண்ணை. (72640)

---

புத்தாயிரமாம் ஆண்டில்

# 2-ம்வருட நீங்கா!நினைவுகளில்!



## அமரர் பொன்னம்பலம் தம்பிமுத்து

| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 03-01-1925 | 06-01-1998 |

திதி: 14-01-2000

வாழ்வாங்கு வாழ்ந்து
வாழ்கவென வழிகாட்டி
அன்பால் எமை வளர்த்து
ஆதரவு பல வழங்கி
ஆக்கங்கள் தந்த தலைவர்
கண்கள் குளமாக
வேதனைகள் விளைவாக
காலமெல்லாம் நினைவாக – எம்மைவிட்டு
காலனவன் கவர்ந்த தென்ன?
நெடுங்காலம் கழிந்தாலும் உங்கள்
நினைவுகள் என்றும் அழியாதவையே!

உங்கள் ஆத்ம சாந்திக்காகக் கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்கி இறைவனை என்றும் இறைஞ்சுகின்றோம் நாம்!

**மனைவி, மகன்மார், மகள், மருமக்கள், பெறாமக்கள், சகோதரி, பேரப்பிள்ளைகள்.**

தகவல்:
மனைவி: தம்பிமுத்து நல்லம்மா,
மகன்: நகேசமூர்த்தி.

மானிப்பாய் வீதி,
உடுவில், சுன்னாகம். (சி/10612)

---

## கல்வி மாணிப் பட்டப்பயில் நெறி

யாழ்ப்பாணம், ஜன. 14

கடந்த காலங்களில் கொழும்பில் நடைபெற்று வந்த தேசிய கல்வி நிறுவனத்தின் தமிழ்மொழி மூல கல்விமாணிப் பட்டப்பயில் நெறி இந்த வருடம் முதற் தடவையாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, கல்முனை ஆகிய இடங்களில் நடைபெற வுள்ளது.

மேற்படி பயில்நெறிக்கு விண்ணப்பிப்போர் ஆசிரிய சேவையில் மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

கல்விமாணிப் பட்டம் ஆரம்பக்கல்விக்கு மட்டுமே வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி பயில் நெறிக்கு விண்ணப்பிக்கவுள்ளோர் விண்ணப்பப் படிவங்களை யாழ். இந்துக் கல்லூரியில் உள்ள தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி நிறுவனப் பிராந்திய நிலையத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த. சிவநாதனிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-10)

## அரிசி விநியோகம்

நெல்லியடி, ஜன. 14

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கிலோ 30 ரூபா விதம் சிவப்பு அரிசி வழங்கப்பட்டு வருகின்றது.

(உ-109)

## மீன் விலை அதிகரிப்பு

குருநகர், ஜன. 14

குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையில் மீனின் விலை மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது.

குடாக்கடலில் மீன்பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதனால் இச் சந்தையில் பிற இடங்களில இருந்து வியாபாரிகள் கொண்டுவரும் மீனே சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது. அதுவும் மிகக் குறைந்தளவு மீனே இச் சந்தைக்கு வியாபாரிகளால் எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

(உ-51)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிப்பு

நெல்லியடி, ஜன. 14

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பொதுச் சபைக் கூட்டத்தில் தோல்வியில் முடிந்தது.

மேற்படி சங்கத் தலைவர் என். சிவஞானசுந்தரம் தலைமையில் தம்பசிட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில்நடைபெற்றவிசேட பொதுக் கூட்டத்தில் இப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரின் பிரதிநிதி சி. பாலசுப்பிரமணியம், பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரதிநிதியாக சமூக சேவை உத்தியோகத்தர் எம். தருமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சாதகமாக 31 பொதுச் சபை உறுப்பினர்களும் எதிராகப் பதினொரு பேரும் வாக்களித்தனர்.

(உ-109)

---


கலாநிதி பண்டிதமணியின்

## நூற்றாண்டு விழாவும் மாணவர்க்கு புலமைப் பரிசில் வழங்கலும்

தலைவர்: திரு. வ. செல்வராசா
(கல்விப் பணிப்பாளர்)

இடம்: யா/நெல்லியடி
மத்திய மகா வித்தியாலயம்

காலம்: 2000 - 01 - 16
(ஞாயிறு) முற்பகல் 9, 30 மணி

- 'முத்திரையிற் பண்டிதமணி' மலர் அறிமுகம் – பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் அவர்கள்
- அறிஞர்களின் பார்வையில் பண்டிதமணி
- புலமைப் பரிசில்கள் வழங்கல்

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்
கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்.

விளம்பர அன்பளிப்பு:-
"தயா"
**சிவசக்தி ஸ்ரோர்ஸ்**
நெல்லியடி.
(சி/10613)



உரும்பிராய்
**லயன்ஸ் கழகம்**
நடத்தும்
இலவச

## மருத்துவ முகாம்

இடம்: கலைவாணி சனசமூக நிலையம்,
கரந்தன், நீர்வேலி.

காலம்: **16-01-2000** ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 9.00 மணி முதல்
11.00 மணி வரை.
(இலங்கை நேரப்படி)

மேற்படி முகாமில்
- கண் பரிசோதனை
- நீரிழிவுப் பரிசோதனை
- இரத்த அழுத்தப் பரிசோதனை
- நெஞ்சு நோய்களுக்கான பரிசோதனை

என்பன இலவசமாக மேற்கொள்ளப்படும்.

கண் பரிசோதனை:
லயன் S. M. பெர்னான்டோ
M. J. F.
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரபல வைத்திய நிபுணர்களும் மருத்துவபீட மாணவர்களும் இந்தப் பரிசோதனைகளை நடத்துவார்கள்.

குறிப்பு: இலவசமாகக் கண்ணாடிகள் பெறுபவர்கள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள் என்பதை அத்தாட்சிப்படுத்தும் — கிராமசேவையாளரின் — சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அனைவரும் வருக!
பயன் பல பெறுக!

லயன் அ. த. க. கிருஷ்ணராஜா
செயலாளர்

லயன் இ. நடராஜா
தலைவர்

மருத்துவ முகாம் சிறப்புற நடத்த வாழ்த்தும்:

**ராஜா தொலைத் தொடர்பகம்**

தொலைபேசி இலக்கம்:
உள்ளூர்: 070 - 212518
வெளிநாடு: 0094-70-212518

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு, (சி/10629)

# நஷ்டத்தில் இயங்கும் கூ. சங்கங்கள் சம்பள உயர்வு தருவதில் நெருக்கடி

அரியாலை, ஜன. 14

கூட்டுறவு ஊழியர்களுக்கான 48 சதவீத சம்பள அதிகரிப்புத் தொடர்பான புதிய சுற்றறிக்கை யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

திருகோணமலையில் உள்ள கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவால் இந்தப் புதிய சுற்றறிக்கை அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

கூட்டுறவு ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக் கொடுப்பனவைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் சிபார்சுக்கு அமையவே கூட்டுறவுச் சங்கங்கள் அமுல்படுத்த வேண்டும் என்று கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய சுற்றறிக்கைக்கு அமைய சில கூட்டுறவுச் சங்கங்கள் சம்பள அதிகரிப்புக் கொடுப்பனவை கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்க முடியாது உள்ளது. சங்கங்கள் நஷ்டத்தில் இயங்குவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

அண்மையில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபைக் கூட்டத்தில் இந்த புதிய சம்பள உயர்வு சுற்றறிக்கை தொடர்பாக ஆராயப்பட்டதாகவும்—

இந்தச் சுற்றறிக்கைக்கு அமைய சங்கம் ஒன்றுக்கு மாதாந்தம் மேலதிகமாக 3 லட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கத் தேவைப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

(ஐ-17)

## படகுச்சேவை ஒழுங்கில்லை

காரைநகர், ஜன. 14

காரைநகரில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் அரச உத்தியோகத்தர்கள் போக்குவரத்திற்கு சீரானப் படகுச் சேவையின்றி சிரமப்படுகின்றனர்.

காலையில் தினமும் இரு மணித்தியாலங்கள் இவர்கள் இறங்கு துறையில் காத்து நிற்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

தமக்குச் சீரான படகுச் சேவை ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு அரச ஊழியர்கள் 26 பேர் ஒப்பமிட்டு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

(உ-73)

## 69 பேருக்கு மாதாந்த உதவிப்பணம்

நவாலி, ஜன. 14

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவதற்கு மேலும் 69 பேர் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பணம் பெறும் அட்டைகளை கடந்த வாரம் சமூக சேவை அலுவலர் அ. அமிர்தலிங்கம் அவ்வப் பகுதி கிராம சேவை அலுவலர்களிடம் கையளித்தார். (ஐ-100)


பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பண்டத்தரிப்பு

**வெற்றுச்சாக்குகள் விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம்**

எமது சங்கத்தில் வெற்றுச்சாக்குகள், வெற்றுப்பைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் தங்களின் விலைகளைக் குறிப்பிட்டு எதிர்வரும் 2000—01—21 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைக் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250.00 வைப்புச் செய்து, நேரடியாகவோ தபால் மூலமோ அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

[சி/10614]



மானிப்பாய் வட்ட
லயன்ஸ் கழகம்
கண்ணுக்கு முதலிடம்
சேவைத் திட்டம்



**இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்**

இடம்: மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை

காலம்: 16-01-2000 ஞாயிறு காலை 9.00மணி

பிரதமவிருந்தினர்: கலாநிதிS.K. சண்முகநாதன்
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ், பல்கலைக்கழகம்)

கழகத்தினால் மல்வம், உடுவில், மானிப்பாய் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட முகாம்களில் பதிவு செய்யப்பட்ட வசதி குறைந்தவர்களுக்குரிய மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

குறிப்பு: 09-01-2000 அன்று புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலையில் மூக்குக் கண்ணாடியைப் பெறத் தவறியவர்களும் பெற்றுக் கொள்ளலாம்.

லயன் S.S. தங்கராஜா, செயல் திட்டத் தலைவர்.
லயன் Dr. உ. ரே. மகேஸ்வரன், தலைவர்.

(72681)



**பதவி வெற்றிடம்**

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சர்வதேச தொடர்புச் செய்தி நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளை அலுவலகத்தில் பின்வரும் ஆளணியினருக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

01 - நிர்வாக அலுவலர்
அரச மற்றும் தனியார் துறையில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் அலுவலக முகாமைத்துவத்தில் போதிய அனுபவத்துடன் செய்தித் துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

02 - எழுதுநர்
கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளுவதில் அனுபவம்.

03 - தட்டெழுத்தாளர்
தட்டெழுத்துத் துறையில் போதிய அனுபவத்துடன் சுருக்கெழுத்து மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள் அனைவரும் தமது சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட சுயவிபரத்தினையும் விண்ணப்பிக்கும் பதவியினையும் குறித்துப் பின்வரும் முகவரிக்கு 30 - 01 - 2000 ஆம் திகதிக்குள் விண்ணப்பித்தல் வேண்டும்.

விளம்பர இலக்கம் - 988
மே/பா: உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(72615)



மீண்டும்
நல்லூரில்
Personal Class
**பொருளியல்**
இ. இராஜேஸ்வரன்
இடம்: UNHCR அருகில்
2002
திங், வெள். 6.15 A.m.
2000
புதன், வியா 6.15 A.m.
2001
செவ், சனி. 6.15. A.m.
(பழையநேரம்)
(72675)



உ
சித்தன்கேணி அருள்மிகு
நாககன்னி அம்பாள் ஆலய அபிஷேக
**விஞ்ஞாபனமும் தீக்குளிப்பும்**

நிகழும் பிரமாதி வருடம் தை மாதம் 11ஆம் நாள் (15 - 01 - 2000) சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு அபிஷேக ஆராதனைகள் தொடங்கி, அம்பாள் வீதி வலம் வந்து பிற்பகல் 1 மணியளவில் தீக்குளிப்பு இடம்பெறும்.

அம்பாளின் அடியார்கள் அனைவரும் பால், தயிர், இளநீர், பழவகை, மலர்கள் என்பனவற்றுடன் வருகை தந்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

சிறப்புச்சொற்பொழிவு:
சைவப்புலவர் நி. தசீதரன் அவர்கள்
பஜனையும் இடம்பெறும்.

(72613) - ஆலயப் பூசகர்



கட்டுவன்
அருள்மிகு
பூரனா புஷ்கலாதேவி சமேத ஐயனார்
தேவஸ்தான நித்திய பூஜை ஆரம்ப
**விஞ்ஞாபனம்**

ஐயன் அடியார்களே!

எம் பெருமானது திருவருளினாலும் அடியார்களது வேண்டுதலாலும் தைப்பொங்கல் தினத்தன்று

**15 - 01 - 2000 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பூஜை ஆரம்பிப்பதற்கான** சாந்தி வழிபாட்டுடன் பூஜை ஆரம்பிக்கப்படும்.

அடியார்கள் யாவரும் தவறாது பங்கு பற்றி எம் பெருமானது திருவருளைப் பெற்றுக் கொள்வீர்களாக.

அடியார்கள் செல்லத்துரை கடை வீதி வழியாக வரவும்.

- பரிபாலன சபை

(72680)



**புங்குடுதீவு நுழைவாயில் பிள்ளையார்**
(மடத்துவெளி)
**ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம்**

ஷ எமது ஆலய பொதுக்கூட்டம் 10-01-2000 அன்று மாலை 4 மணிக்கு நடைபெற்று பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள்.

தலைவர்:- வி. த. தம்பிராசா
உப தலைவர்:- க. கெங்கேஸ்வரன்
செயலாளர்:- திருமதி ரேவதி செல்வராசா
உப செயலாளர்:- திருமதி தி. மனோன்மணி
பொருளாளர்:- க. குலசேகரம்

நிர்வாக உறுப்பினர்களாக 9 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். சகல தெரிவுகளும் ஏகமனதாக இடம்பெற்றன.

. - நிர்வாக சபை

நுழைவாயில் பிள்ளையார்,
புங்குடுதீவு. (72683)



**விற்பனையாகின்றன!**

**லீலா — 2000**

சித்திரக் கலண்டரில் முன்னோடிகளான
**லீலாவின்**
- சித்திர பஞ்சாங்க நாள் கலண்டர்கள்
- பஞ்சாங்க மாத கலண்டர்கள்

உங்கள் தேவைகளுக்கு
**உதயன் பணிமனை**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கு பயங்கர நிலைமை ஏற்பட்டுவருகிறது

## சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக் கொலையைக் கண்டித்து உரை

யாழ்ப்பாணம், ஜன. 14

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சட்டப் பிரிவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளைப் பார்க்கும் போது யாழ். மாவட்டத்தில் பெண்களுக்குப் பயங்கரமான நிலை ஏற்பட்டுவருவதை அவதானிக்க முடிகிறது.

மேற்கண்டவாறு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் கூறினார்.

புங்குடுதீவு சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக் கொலையைக் கண்டித்து நேற்று யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து அவர் உரை நிகழ்த்தினார்.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கண்டனக் கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றும்போது கூறியதாவது:-

புங்குடுதீவில் சாரதாம்பாள் பாலியல் வல்லுறவு அங்கு இடம்பெற்ற மூன்றாவது சம்பவம் ஆகும். ஏனைய இரு சம்பவங்களும் மறைக்கப்பட்டுவிட்டன. சாரதாம்பாள் கொலை செய்யப்பட்டதன் மூலமே இந்தப்பாலியல்வல்லுறவுச் சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இன்று கொழும்பில் சாரதாம்பாளின் உடல் நீதியுடன் சங்கமம் ஆகும் இவ்வேளை அவரது கொலையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சாரதாம்பாளின்கொலைக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று கோரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஐ. நா. சபைக்கும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் மகஜர்கள் அனுப்பப்படவுள்ளன.

பெண்களுக்கு இதுபோன்ற சம்பவங்கள் இனியும் நடக்கக் கூடாது என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம்.

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் போரின் கொடுமையை விட பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் அதிகமானவை.

ஒவ்வொரு பிரஜைக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டே மீள்குடியமர அழைக்கப்பட்டோம். ஆனால் இன்று ஒவ்வொரு பெண்ணும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பீதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

இப்படியான பாதுகாப்பு எமக்கு அவசியமா? பகலில் நிம்மதியாக இங்கே நடமாட முடியாதுள்ளது. இரவிலும் நிம்மதியாகத் தூங்கமுடியாது. யார் கதவைத் தட்டுகிறாரோ, டோர்ச்லைற் அடிக்கிறாரோ என்ற அச்சத்துடன் வாழ வேண்டிய நிலை பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது. சில பெண்களுக்கு இராணுவம் மூலம் இதே சூழ்நிலைகள் கிடைத்திருக்கின்றன என்றும் எம்மிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாரதாம்பாள் மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாத போதும் இந்தகைய நிலைமையை நாம் தொடரவிடக் கூடாது.

பெண்களுக்குச் சரியானபாதுகாப்பும் அவர்கள் வாழ்வதற்கான உத்தரவாதமும் அளிக்கப்பட வேண்டும் — ஒருமித்த குரலில் பெண்கள் எல்லோரும் இந்தக் கொடுமைக்கு எதிராகக் குரல் எழுப்ப முன்வர வேண்டும் —

இதனை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைப்போம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

யாழ். இந்து மகளிர்க் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ், சட்டத்தரணிகள் திருமதி லிங்கா துரைராஜா, திருமதி எஸ். பவானி, மனித நேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு. பரமநாதன் ஆகியோரும் சாரதாம்பாள் கொலையைக் கண்டித்து உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் கறுப்புப் பட்டி அணிந்து தமது கண்டனத்தைத் தெரிவித்தனர். (இ-5)

## பொங்கல் கொண்டாடமுடியாத நிலையில் இடம்பெயர்ந்த மக்கள்

தென்மராட்சியின் கரையோரப் பிரதேசங்களான கோவிலாக்கண்டி, தனங்களப்பு, மறவன்புலோ பகுதி மக்கள் தற்போதைய சூழ்நிலையில் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட முடியாத நிலையில் உள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாக இடம்பெயர்ந்து வாழும் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள், தமது சொந்த விவசாய நிலங்களில் நெல் வயல்கள் அறுவடைக்கு உகந்ததாக உள்ள போதும், வழமை போல பொங்கல் நாளில் புத்தரிசி இட்டு பெருவிழா எடுத்துக் கொண்டாட முடியாத நிலையில் வேறு இடங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பகுதிகளைச்சேர்ந்த மக்கள் அமைதியான சூழ்நிலையில் அவர்களது சொந்த இடங்களில் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தித் தருமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் அமைதிக்கான அமைப்புக்களிடம் கேட்டிருந்த போதும் இதுவரை எந்தப் பயனும் ஏற்படவில்லை என மறவன்புலோ விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். (இ-8-30)


## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

அளவாவோடை, ஏழாலை மேற்கு சுன்னாகம்
விநாயகர் ஆலய கட்டட நிதிக்காக
இன்று (14—1—2000) அதிர்ஷ்டம் பார்க்கப்
படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
எதிர்வரும் 4—3—2000 ஆம் திகதி
மகாசிவராத்திரி தினத்தன்று
அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை
அறியத் தருகின்றோம்.

நிர்வாக சபையினர்
விநாயகர் ஆலயம்.

அளவாவோடை,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (72695)



அளவெட்டி
## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்
## கும்பாபிஷேக தினம்-
## மஹாசங்காபிஷேகம் (1008)

★★★★★★★★★★★★★★★★

மேற்படி சங்காபிஷேகம் (18—01—2000) செவ்வாய்க்கிழமை ஊர்ப்பொதுவாக நடைபெறவுள்ளது. அபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய பணம் மற்றும் பொருள்களை அடியார்கள் ஆலயச் செயலகத்தில் ஒப்படைக்கவும்.

— தர்மகர்த்தாக்கள்
சபையினர்

(72696)


## பண்ணாகத்தில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 14

பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்துசமய விருத்திச் சங்கத்தின் தைப்பொங்கல் விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ முருகன் அன்னதான சபை மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தின் தலைவர் வே. ஞானகுரு தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (இ-4)

## பொங்கல் விழாவுக்கு பஸ்சேவை

யாழ்ப்பாணம், ஜன. 14

மாவை - கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயிலில் நாளை நடைபெறவிருக்கும் பொங்கல் விழாவில் பங்குபற்றும் பக்தர்களுக்கு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலடியிலிருந்து அன்று காலை 9 மணி முதல் பஸ்சேவை நடத்தப்படவிருக்கின்றது. (இ-3)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜன 14

ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமம் நடத்தும் ஸ்ரீராமகிருஷ்ண புத்தகக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடைபெறும், கல்லூரி அதிபர் ஆ. சிவாஜி கண்காட்சியை திறந்து வைப்பார். (இ-6)

## பதனிடல் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜன. 14

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ள விவசாய விளைபொருள்களின் பதனிடல் பயிற்சி நெறி 17 ஆம் திகதி திங்கட்கிழமை சங்கானை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் க. சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் 'போருட்' மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த தொண்டர்கள் கலந்து கொள்கின்றனர்.

இறுதி நாளான 21 ஆம் திகதி பயிற்சி நெறியில் பதனிடப்பட்ட பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளன என்று பட்டினிக்கெதிரான நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

## மனநோயாளி தாக்கி இளம் பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 14

மனநோயாளியான ஒருவரின் கல் வீச்சுக்கு உள்ளான இளம் பெண் ஒருவர் நெற்றியில் காயமடைந்தார்.

யாழ்ப்பாணம் ஆசிர்வாதம் ஒழுங்கை முகப்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அந்த இடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் கௌரி (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார்.

கச்சேரிக்குச் சென்று விட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)


## மரண அறிவித்தல்கள்

### மத்தேசு ஜோண்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மத்தேசு ஜோண் (இளைப்பாறிய மதுவரி கூட்டுத்தாபனம்) நேற்று முன்தினம் (12-01-2000) புதன்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மத்தேசு மரியையின் அன்புப் புதல்வனும் பூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆசிர்வாதம், பொன்னையா, யோசேப், அந்தோனிப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரபாவதி, யோன் பெனடிற் குணசேகரம் (மக்கள் வங்கி), அன்ரன் ராஜ்குமார் (கனடா), பரமேஸ்வரி (கனடா), பத்மாவதி, சாந்தகுமார் (கனடா), ராஜகுமாரி, ஜெயக்குமார் (ஜேர்மனி), காந்திமதி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பிரான்சிஸ் (புகையிரத திணைக்களம் திருமலை), ராஜபுத்திரி, பொன்மலர், ஜெயராஜா, அல்பிரட், மஞ்சு, கேந்திரவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் றெஜினோல்ட், றெமிஜியா, றெனோஜன், டினேஸ், டிலான், டிலிஷியா, சிந்துஜா, ஜெயதீபன், சுஜீவன், சுபித்தா, விஸ்டன், சுமித்ரனா, சபீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (13 - 01 - 2000) வியாழக்கிழமை ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்:
ஜோண் பெனடிற் குணசேகரம்
(மகன்)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (72705)

### பொன்னையா சிதம்பரநாதன்

(சாமியார்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா (நம்பிராசன்) சிதம்பரநாதன் (சாமியார்) சித்த வைத்திய கலாநிதி 12 - 01 - 2000 புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் இரத்தினம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா சிவக்கொழுந்துவின் அருமைத் தம்பியும் ஸ்ரீசிவ சண்முகானந்ததேவி, ஸ்ரீசிவ அருளானந்ததேவி, திருத்தணிகைநாதன் (லண்டன்), திருச்செந்தூர்நாதன் (லண்டன்), காலஞ்சென்ற திருப்பரங்கிரிநாதன், திருச்சிவகிரிநாதன் (லண்டன்), திருஅழககிரிநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணநாயகம், காலஞ்சென்ற சற்குணநாயகி, செல்வநாயகி, சண்முகவடிவேல் ஆகியோரின் மைத்துனரும் கோபிநாத்சிங் (சுவிஸ்), சந்திரசேகரம், கமலாதேவி, மாயா ஆகியோரின் சகலனும் அன்பழகன் (மாருதி அச்சகம், பண்ணாகம்), காலஞ்சென்ற கங்கைவேணியன், ஜெயமலர், ஸ்ரீலலிதா, பிருகதாம்பாள் புஸ்பா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கங்கைதாசன், திருக்கோணேஸ்வரநாதன், திருக்கேதீஸ்வரநாதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அராலி மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று வேலங்காடு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
வெ. அன்பழகன்
(மருமகன்)

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை. (72704

# பிரத்தியேக வகுப்புக்கள்

[கிறிஸ்தவ நாகரிகம் ரி. றங்கன்]

A/L G.A.Q. B A. Part-I B. A. Final

**ஆரம்பம்**

- A/L (2002) 19-01-2000 புதன் 4.30 (பு. நே.)
- G. A. Q. 17-01-2000 திங்கள் 4.30 (பு. நே.)
- B.A. Part- I 18-01-2000 செவ்வாய் 4.30('')
- B. A. Final 19-01-2000 புதன் 5.30 ('')

இல. 394, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

(72694)


## இலங்கையின் அப்போஸ்தலரான முத்திப்பேறுபெற்ற யோசவ்வாஸ் யாத்திரைத்தல

# பெருவிழா

கொட்டடி - பண்ணை

தை 16 காலை 8 மணிக்கு (பு. நே.)

யாழ். மாவட்டக் குருமுதல்வர்
J. P. செல்வராஜா அடிகளாரால்
திருவிழாத் திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்படும்.

இறை அருள் பெற அனைவரும் திரண்டு வருக.

– பரிபாலகர்

(சி/10636)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா பஞ்சாட்சரம்

கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி செல்லம்மா பஞ்சாட்சரம் நேற்று (13 - 01 - 2000) வியாழக்கிழமை மாலை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற பஞ்சாட்சரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் அன்னம்மா, இராசம்மா மற்றும் சோதிரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சி. செல்வராணி, திருமதி சி. சுகிர்தரட்ணம், திரு. ப. மகேந்திரராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் சிவசுப்பிரமணியம், திரு. சிவஞானம் மற்றும் திருமதி சந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் சித்தரஞ்சன்- கிருபா (கனடா), திருமதி ரஜனி - நிர்மலராஜன், ராகவன் - சாந்தி (கனடா), ராதா - மகேஸ்வரன் (கனடா), சசிகரன் - மதிவதனி (நோர்வே), சதீஸ் (பிரான்ஸ்), பமிலா - இந்திரகுமார் (ஆஸ்திரேலியா), கிரிந்தன் (ஆஸ்திரேலியா), திருமதி மீரா நாகவண்ணன், புவிராஜ் மதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிமலன், நிருஷா, ஜெதுர்ஷன், கவிந்தினி (கனடா), பவித்திரன் (ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14 - 01 - 2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
ச. சிவஞானம்
(மருமகன்)

(சி/10637)

## இளையதம்பி செல்லத்துரை

(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை)

இளையதம்பி செல்லத்துரை 13—01—2000 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி விக்ரோரியா செல்லத்துரையின் அன்புக் கணவரும் மேரி மாக்கிறேற் (கிளி), அன்ரன் சாந்தருபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் வீரராஜன் (ஆட்பதிவுத் திணைக்களம், யாழ். கச்சேரி), லயிலா (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமனாரும் புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர்களான பிரியதர்சன் (A/L 2002), ஜெயப்பிரியன் (ஆண்டு 11), றொசான் (ஆண்டு 8), றொஷானி (ஆண்டு 8 — யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்), கெவின், கெயாலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நன்றித் திருப்பலிக்காக இன்று (14-1-2000) வெள்ளிக்கிழமை பி. ப. 3.30 (பு. நே) மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கத்துக்காக புனித கொந்சேஞ்சியாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
எம். எம். வீரராஜன்
(மருமகன்)

22/5, பாரதி வீதி,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/10638)

### வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்)

போக்குவரத்துப் பாதை இல்லாத காரணத்தால் போதிய அளவு பொருள்கள் அங்கு வருவதில்லை.

வாரத்தில் மூன்று நாள்கள் மட்டும் சிறுதொகைப் பொருள்கள் அங்கு அனுப்பப்படுகின்றன. அங்குள்ள மக்களுக்கு இது போதுமானதாக இல்லாததால் மக்கள் பட்டினி நிலையில் உள்ளனர்.

இந்த மக்களின் பரிதாபகரமான நிலையைக் கருத்தில் கொண்டு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்— என்றுள்ளது. (இ-3-4)

### எலும்புக்கூடுகளில்...

(முதலாம் பக்கத் தொடர்)

எலும்புக்கூட்டுடன் காணப்பட்ட ஷேர்ட்டை வைத்தே அவர் அடையாளம் காட்டினார்.

குப்பிளான் பிரதேசத்தைப் படையினர் கைப்பற்றிய பின்னர் இவர் தமது மாடுகளைப் பார்ப்பதற்காக 22 - 10 - 95 அன்று அங்கு சென்றார் என்றும் —

அதன் பின்னர் இவர் காணாமற்போயிருந்தார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் பதில் நீதிவான் எஸ். சபாநாதன் நேற்று அங்கு சென்று எலும்புக்கூடுகளைப் பார்வையிட்டார்.

அங்கு சென்ற சட்ட வைத்திய அதிகாரி எலும்புக்கூடுகளைப் பார்வையிட்டதுடன் அவற்றைத் தனித்தனியாகப் பொதி செய்து 'சீல்' இட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் இன்று இடம் பெறவுள்ளது. (இ-3-133)

### மனநோயாளி...

(11ஆம் பக்கத் தொடர்)

தாம் திரும்பி வந்த சமயம் தமக்கு முன்னால் போய்க் கொண்டிருந்த அந்த மனநோயாளி திடீரென திரும்பி பெரிய கல் ஒன்றை எடுத்து தமக்கு எறிந்து விட்டு திரும்பவும் எறிய கல் எடுத்த சமயம் தாம் தப்பி ஓடியதாகவும்—

பின்னால் துரத்திக் கொண்டு வந்த மனநோயாளியை அவ்வேளை அந்த வீதியால் வந்த சிலர் மடக்கிப் பிடித்து தம்மைக் காப்பாற்றியதாகவும் காயமடைந்தவரால் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-139-15)


**நிரு**
கோண்டாவில்.
கணக்கீடு
**99 Day Class**
14 - 01 - 2000 இல்
கம்பனி
2-30 — 4-00 p.m.
by: செ. கொலின்ஸ்
(72691)



**இலவசம்!**

★ ஷண்ணின் பொங்கல் போனஸ் புதிய இரண்டு கசற்றுக்களில் பாடல்கள் பதிவு செய்யும் உங்களுக்கு ஓர் அழகிய ஓடியோ வர்ண கவர் இலவசம்.

- ஷேரம
- கண்ணுக்குள் நிலவு

ஓடியோ CD விற்பனைக்கு உண்டு.

**ஷண் றெக்கோடிங் ஸ்பொட்**
பெரியகடை, யாழ்ப்பாணம்.
(72763)


### சாரதாம்பாள்...

(முதலாம் பக்கத் தொடர்)

எஸ். சிவதாசன் மற்றும் பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

சாரதாம்பாளின் சடலம் வைக்கப்பட்டிருந்த பெட்டி திறக்கப்பட்டதும் அவரது ஐந்து வயது மகளான சுகிர்தா சடலத்தைப் பார்த்ததாகவும் — பார்த்ததும் பயத்தில் அழுது குளறியவாறு ஓடியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

சடலம் அடக்கம் செய்யப்பட்டது. (இ-3)

### ரான்ஸி

(முதலாம் பக்கத் தொடர்)

நீதிமன்றத்தில் கொண்டு வந்த இந்த வழக்கு ஏறத்தாழ ஆறு மாத கால இடைவெளியின் பின்னர் முடிவுக்கு வந்துள்ளது. (இ-8-4

### தனங்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

குதல் நடத்தியதாகவும்—

அதில் விடுதலைப் புலிகள் தரப்பில் 12 பேர் உயிரிழந்தனர் என்றும் — பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் 3 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்; 11 படையினர் காயமடைந்தனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-4-133)

### விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

ததாகவும் —

பின்னர் மறைவிடம் ஒன்றுக்குக் கூட்டிச்சென்று வாயில் துணியைத் திணித்துவிட்டு தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தியதாகவும் —

இதனால் பாதிக்கப்பட்ட மாணவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும்— தெரியவந்தது.

இது தொடர்பாக பிரஸ்தாப மாணவனின் தந்தை சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்ததன் பேரில், சம்பந்தப்பட்ட சிப்பாய் அராலி முகாமில் இருந்து விசாரணைக்காக உடுவில் பிரிக்கேட்டுக்கு நேற்று முன்தினம் காலை அழைத்து வரப்பட்டிருந்தார்.

அங்கு வைக்கப்பட்டிருந்த சமயம் இவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

விஜேபாகு றெஜிமென்டின் முதலாம் படையணியைச் சேர்ந்த எல். ஏ. திலகரட்ன என்ற அந்தச் சிப்பாயின் மரணம் தொடர்பான விசாரணையை மல்லாகம் பதில் நீதிவான் எஸ். சபாநாதன் நேற்று நடத்தினார். (உ-3-6)

### கல்லடியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தம்பதியான ராஜ்குமார், ராசகுமாரி ஆகியோரும், தேவசகாயம் என்பவரும் காயம் அடைந்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர் கூனாவடி கொலனியைச் சேர்ந்த பரமானந்தம் திவாகரன் என்பவர் ஆவார்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 15 பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.


அனேக மாணவர்களினதும் பெற்றோர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க

**A/L 2001, A/L 2002**

பரீட்சைக்கான பொது ஆங்கில வகுப்பு ஆரம்பம்

**16 -- 01 -- 2000**

ஞாயிறு மாலை 3. 00 மணி

ஞாயிறு
சனி | 3. 00 மணி — 4. 00 மணி

Lectures By' **Mr. M. A. HARY**

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்.

**புதிய நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.
(72632)



கணனி கற்கை நெறியை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு

**DCS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்**

மேற்படி புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் எமது கிளை நிறுவனங்களிலும் பின்வரும் புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

- ★ மொடோன் ஸ்ரோர்ஸ் — நெல்லியடி
- ★ தமிழ் பூங்கா புத்தகசாலை — நெல்லியடி
- ★ அம்பிகா புத்தகசாலை — பருத்தித்துறை
- ★ பிரியங்கா புத்தகசாலை — உடுப்பிட்டி.

விண்ணப்பப் படிவ கட்டணம் 100/-
விண்ணப்ப முடிவு திகதி 20-01-2000

-Director D. C. S.

124/2 பலாலி வீதி,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

M. M. V. வீதி,
நெல்லியடி.
(72688)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.